தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 6—3—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 38



"ஏண்டா வாசு, சித்தி கத்திக் கிட்டே இருக்காளே, நீ உள்ளே என்னடா செய்யிறே? வாசு!"

"..................!"

சொக்கநாத பிள்ளை எழுந்து உள்ளே போனுர். முகத்தைச் சுளித்துக்கொண்டு வெளி நடந்தான் வாசு. இப்படி ஒரு முறையா இருமுறையா? தினசரி! சொக்கநாதரின் இதயத்தை இந்தக் கவலை சுரண்டத் தொடங்கியது.

கிளிபோல மனைவி, தெளிந்த நீரோடை இதயம் கொண்ட மகன்; அவள்-அலமு - அவனுக்குச் சித்தி; இவர்கள் இருவருக்கும் மத்தியில், காட்டுக்கும் நாட்டுக்கும் இடை நிலைப் பருவத்திய சொக்கநாதர்!

வேர்-இலை-பூ! ஆனுல் வெவ்வேறுன கோணங்கள்!

"அருமைத் துணைவி-எனக்கு வாய்த்த மனைவி! அருமாந்த செல்வன்-அன்னை மறந்த புதல்வன்" இந்த இன்பநினைவலைகள்தான் சொக்கநாதரின் வாழ்க்கைப்படகைத் தள்ளிக்கொண்டு சென்றன. ஆனுல்...!

வாசு அலமுவோடு பேச மறுக்கிறனே, அவள் காட்டும் அன்பை ஏற்க முடியாதென்கிறனே! - இதை நினைத்து நினைத்துத்தான் சொக்கநாதர் மிக வருந்தினுர். தங்க நிறமேனி செம்பாகிக் கொண்டுவந்தது. அவருக்குச்சொத்துண்டு நிறைய, சுற்றத்தார் இருக்கிறுர்கள் ஏராளமாக. வாரீசுக்கு ஒரு மகன், வீட்டில் விளக்கேற்றி வைக்க ஒரு பூங்கொடி,-இப்படியாக இறும்பூதெய்தியிருந்த அந்த உள்ளத்தில் கல்விழுந்தது. வாசு,-அலமு இருவரின் இருதுருவக்கோலம் அந்தக் குடும்பத்தலைவனை அலைக்கழித்தது, பாவம்!

ஒற்றைக்கல் மூக்குத்தி, காதுகளில் ஒளிவீசும் வைரக்கம்மல். தித்திக்கும் பேச்சுக்காரி; ஆனுல் பேசுவது மெத்தக்கடினம். குருவி ரத்த நிறப்புடவை, அதிலே கோலப்புள்ளி வைத்தாற்போல் பொட்டிட்ட ரவிக்கைத்துணி, உருவத்தில் மஞ்சட் பதுமை - பருவத்திலே நிறைகுடம்! - இவள்தான அலமு - வாசுவுக்கு வாய்த்த சின்னம்மா-தந்தைக்கு இரண்டாம் தாரம்! களங்கமிலாப் பெரியவர் சொக்கநாதருக்கு, பி. ஏ. படிக்கும் தன் மகன் ஏன் சித்தியிடம் பராமுகமாக இருக்கிறுன் என்றுதான் புரியவில்லை. ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் சிந்திப்பார்; ஒரு முடிவுக்கும் வரமுடியாது. பெருமூச்சு விட்டுக்கொண்டு எழுந்துபோய் விடுவார்.

வாசுவுக்குக் குடும்பத்தின் கௌரவம்தான்மூச்சு -மயிரிழை மாசுண்டாலும்மரக்கிளையைத் தேடிவிடும் மானஸ்தன். என்றும் 'சங்கோஜி'யல்ல. அடுத்த முகம் பார்க்கமாட்டான். தொடுத்த கணை தாங்குதற்கு வலிவற்றவன் என்று சொல்லுதற்கும் அவன் கோழையல்ல! வகுப்புத் தோழிகளைக் கிண்டல் செய்வான், வகுப்பையே சிரிப்பில் ஆழ்த்திவிடுவான் - அவன்தான் - அந்தக் கல்லூரிப் போக்கிரிதான் வீட்டிலே 'ஓலைப்பாம்பாக' நடந்துகொண்டான்.

அலமுவின் காலடி ஓசை கேட்டதும் அவன் வெளித்திண்ணைக்குப் போய்விடுகிறுன். அவள் வெளியில் வந்தால் இவன் மாடிப்படி ஏறுகிறுன். அவளைக் கண்டாலே அவன் உடல் வியர்க்கிறது. முகம் கறுப்பேறுகிறது. சொக்கநாதருக்கு மட்டுமல்ல, அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் அத்தனை பேருக்குமே அது புதிராகத் தானிருந்தது. கிரல் விழுந்தமேனி முதுமையின் சாரல் படிந்த பருவம் - சொக்கநாதர் இந்த வேதனையை எத்தனை நாளைக்குத்தான் சகித்துக்கொண்டிருப்பார்? வீடு எப்போதும் சலசலப்பாக இருக்க வேண்டும், குதூகலம் குறையக் கூடாது என்று ஆசைப்படுகிறவர் சொக்கநாதர். அவருடைய ஆசையிலே பிளவு பாய்ந்தது. விழுந்த பிளவைப் பழுதுபார்க்கத் துடித்தார் சொக்கநாதர்.

"தனித்தனிக் குணவடிவங்கள்! கூடாது! குடும்பம் தலைகவிழ்ந்துவிடும்! அதற்கு மாற்று மருந்து............" சொககநாதர் திகைத்தார் ஒருகணம். தளதளத்த குரலில் தனக்குத் தானே சொல்லிக்கொண்டார்', "வாசுவுக்குத் திருமணம்! ஆம், வாசுதேவனுக்குக் கல்யாணம்! அதுதான் மாற்று மருநது! முனுமுனுப்பையும் மூலைக்கொருவர் பிரிவதையும் குறைத்திட முறிவில்லாத அந்த மூலிகைதான் கொடுக்கவேண்டும்! திருமணம! கல்யாணம்! ஏற்பாடு செய்கிறேன்!"

தந்தை செய்த திருமண ஏற்பாடு வாசுவுக்குத் திகிலூட்டுவதாகத் தானிருந்தது. சொக்கநாதரிடம் தன்மீது யாரும் பழி சுமத்திச் சொல்லியிருப்பார்களோ என்றுகூட அவன் நினைத்ததுண்டு.

தைத்திங்கள் இருபதாம் நாள்! சொக்கநாதர் திருமணத்திற்கு நாள் குறித்துவிட்டார். மணமகள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோயில்பட்டி - சொந்த ஜாதி, சொத்துள்ள குடும்பம். ஒரு படிக்காத பெண்ணுக்கு, பட்டம் பெற்ற மாப்பிள்ளை அதுவும் வசதியுள்ள மாப்பிள்ளை கிடைப்பதென்றுல் இந்தக் காலத்தில் எளிதில் கிடைக்கக்கூடியதா? அதனுல்தான் பெண்வீட்டுக்காரர்கள் திருமணத்தை ஏகத் தடபுடலாக நடத்திக்காட்ட முடிவுசெய்தார்கள். தென்னுட்டின் ஓரக்கரையிலே பெண்வீடு; வடக்கு விளிம்பிலே - சென்னையிலே மாப்பிள்ளை வீடு - திருமணம் மதுரையிலே - மீனுட்சி அம்மன் கோயிலிலே! யாரோ சாகப்போகிற கிழவர்கள்,-சருகாகிப்போன உள்ளத்தினர் முடிவுசெய்த ஏற்பாடு. வாழ்க்கையில் பாதிக் கட்டத்தைத் தாண்டியவுடனேயே, மனிதர்களின் மனக்குகைகளில் வீம்பு குடிகொண்டுவிடுகிறது. பொது நலத்தைக்கூட மறந்து தங்களைத் தாங்களே வீம்புக்கு அடிமையாக்கிக்கொள்ளும் மனித ஜாதியினர் அரசியலிலேயே இருக்கும்போது, ஆண்டாண்டுக் காலமாக நம்மை அமிழ்த்திக்கொண்டிருக்கும் சாஸ்திர சம்பிரதாயத்தையா விட்டுக்கொடுப்பார்கள் கிழவர்கள்! அதனுல்தான் மதுரை மீனுட்சி அம்மன் கோயில் மணமண்டபமாயிற்று போலும்!

★

இப்பொழுதெல்லாம் அலமு வாசுவின்மீது அக்கறையே எடுத்துக்கொள்வதில்லை. முன்பெலலாம் பேசிப் பார்ப்பாளே, இப்போது அந்த முயற்சிகூடக் கிடையாது. 'உம்' என்றிருப்பாள். சொக்கநாதர் வந்தாள் சோறு போடுவாள். ஒப்புக்காகச் சிரிப்பாள், ஆனுல் முகத்திலே படர்ந்து கிடக்கும் இருளை அந்த மின்மினிப் பூச்சியால் போக்கிவிட முடியுமா? இருபத்திமூன்று வயதுக்குள்ளேயே தனக்கொரு மருமகள் வரப்போகிறுளே என்ற கவலையோ என்னவோ? ஏதோ ஒரு ஏக்கம் அவளைப்

— 12-ம் பக்கம்—

மாதவி

"ஈரோட்டான்"

கோவலனது செல்வத்தின் சிதைவிற்கு மாதவி காரணமாக மாட்டாள். வேறு பல ஏதுக்கள் உள. தன் வாழ்விலே வாணிபம் செய்து பொருளினை மேலும் மேலும் கோவலன் ஈட்டினான் என்பதற்குச் சிலம்பிலே சான்றில்லை. செல்வ மிகுதியால் பொருள் ஈட்டுவதைப் பற்றிக் கவலையுறாமல் வீணே உண்பதும், உடுப்பதும், இன்பங் காண்பதும், உறங்குவதுமாக தன்னரிய வாழ்நாட்களை வீணாக்கினான் கோவலன். மேலும் பொருளின்றித் துன்பப்பட்டோர்க்கும் தன்னை நோக்கிவந்த வறியோர்க்கும் இல்லையெனாது தன் செல்வத்தின் பெரும் பகுதியைக் கோவலன் வாரி வழங்கினான். மாடலன் என்ற வேதியனுக்கும், மகனையிழந்த ஒரு தாய்க்கும், பொருளின்றி வாடிய ஒரு பார்ப்பனன் குடும்பத்திற்கும் பொருள் உதவிசெய்திருக்கின்றான். தன் மகள் மணிமேகலைக்குப் பெயரிடும் நன்னாளன்று தன் மனை நோக்கி வந்தோர்க்கெல்லாம் இல்லையெனாது பொன்னும் பொருளும் ஈந்தான். வாணிபம்செய்து பொருள் ஈட்டிச் செல்வத்தைப் பெருக்காமல் அறமொன்றையே கருதி அள்ளிக் கொடுத்துக்கொண்டே இருந்தால் முன்னோர் ஈட்டிய செல்வம் தன்னளவில் குன்றாமல், அழியாமல் எத்தனை நாட்களுக்கு வரும்? இந்த உண்மையேன் கோவலனுக்குத் தெரியாமல் போனது? தான் மேற்கொண்ட ஒழுங்கற்ற வாழ்வாலும், உழைக்காது இன்பவாழ்வு வாழ வேண்டுமென்ற சோம்பேறித்தனத்தாலும், கவனமின்மையாலும் பொருளையெல்லாம் இழந்த கோவலன் தன் குறையை யுணராது, குற்றமற்ற மாதவியைக் குறை கூறுவது எவ்வகையிலும் பொருத்தமற்ற செயலேயாகும்.

காதல் இன்பத்திலே திளைத்திருந்த இருவரும் வேடிக்கையாகச் சில பாடல்கள் பாடவேண்டுமென விழைந்தனர். எனவே, கோவலனும் வேடிக்கையான முறையிலே தான் வேறொரு பெண்மேல் காதல் கொண்டவன்போல விளையாட்டாக ஒரு பாடலைப் பாடினான். இவனைப் போன்றே மாதவியும் விளையாட்டாகத் தான் வேறொருவன்மேல் காதல் கொண்டவளாக வேடிக்கையாகப் பாடினாள். இதற்கு ஏன் கோவலன் மாதவியை வெறுக்கவேண்டும்? பரத்தை, கணிகை என்று பலவாறு ஏன் வையவேண்டும்? இவன் மட்டும் தான் விரும்பியபடி பாடுவதற்கு உரிமை கொண்டாடும்போது மாதவியும் அவ்வுரிமையைப் பெற விரும்பினால் அதனால் வரும் தவறென்ன? நாமும் வேடிக்கையாகப் பாடினோம். அது போன்றே மாதவியும் வேடிக்கையாகப் பாடினாள். இதிலென்ன தவறு என்று ஏன் கோவலன் உணரவில்லை? எவ்விதமான குற்றங்குறையுமின்றி எட்டாண்டுகள் நம்மைக் காதலித்து வாழ்ந்த மாதவி இன்று அக்காதலினின்றும் வேறுபடப் போகிறாள் என்று ஏன் கோவலன் எண்ணிப் பார்க்கவில்லை? இதற்கெல்லாம் காரணம் அவன் நிலையான மனதினையும், ஆழ்ந்த சிந்தனையையும் பெறாமல் போனதுதான்.

மாதவியின் இரண்டாவது கடிதத்தைக் கண்ட கோவலன், தான் மாதவியை விட்டுப் பிரிந்தமைக்காக வருந்தி, அவள் எவ்வகையிலும் குற்றமற்றவள் என்பதை யுணர்ந்து "மாதவி தீதிலள்" என்று தானே தீர்ப்புக் கூறிவிடுகின்றான். மாதவி உண்மையாகவே பொருளாசையுடையவளாக இருந்தால், கோவலன் இறந்த பின்பு பிற செல்வந்தர்கள் பால் தொடர்புகொண்டு தான் விரும்பிய பொருளை ஈட்டியிருக்கலாம். மாதவியிடமுள்ள ஒப்பற்ற அழகிற்கும், கலைச்சிறப்பிற்கும் அடிபணியாத செல்வரும் உளரோ புகாரில்? அவள் விரும்பியிருந்தால் ஆயிரம் ஆயிரம் செல்வச்சீமான்கள் அவள்பால் இன்பம் காணக் காத்திருப்பர். ஆனால் அவ்வாறான இழிசெயலைச் செய்ய மாதவி எண்ணியதேனும் உண்டா? இல்லையே! தன் காதலன் மதுரையிலே வெட்டுண்டு இறந்த செய்தியைக் கேட்டபின் கண்ணீர்விட்டுக் கதறியவளாய், பலவாறு துக்கித்தவளாய் வாழ்விலே வெறுப்புற்றுத் தன்னரும் பெரும் செல்வத்தையெல்லாம் இல்லோர்க்கு அறஞ்செய்தாள். கணிகையர் குலவாழ்வையே வெறுத்து பௌத்த மதத்திலே சேர்ந்து தூய துறவு வாழ்க்கையை மேற்கொண்டாள். தான் மட்டுமின்றித் தனது ஒப்பற்ற மகளாகிய மணிமேகலையையும் துறவு வாழ்விலே ஈடுபடச் செய்தாள். தனக்கும், தன் மகளுக்கும் அழகுற அமைந்துள்ள கார்மேக மன்ன கூந்தலைக் களைந்து, காவியுடையுடுத்து, புத்தன் காட்டிய புண்ணிய வழி ஏகினாள்.

கண்ணகி கற்புடன் வாழ்ந்தாளென்றால் அதிலென்ன வியப்பிருக்கின்றது? கண்ணகி குடும்பப் பெண்ணாகையால் கற்புடன் வாழக் கடமைப்பட்டவளாயிற்றே! அவள் கற்பு வழுவி வாழ விரும்பினாலும் அவளைச் சூழ்ந்துள்ள சுற்றமும் சமுதாயமும் அதற்கு அவளை அனுமதிக்காது. ஆனால், மாதவி நிலையோ இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகும். கற்பைக் காசிற்கு விற்று வாழும் கணிகையர் குலத்திலே மாதவி தோன்றினாள். கற்பிழந்து வாழ்வாரிடையே கற்புத் தவறாமல் ஒருத்தி வாழ்ந்தாளென்றால் அச்செயல் உண்மையில் பாராட்டுதலுக்குரியதாகாதோ? கற்பை விற்று ஏனைய கணிகையர்போல் வாழ அனேக முறை மாதவி அவளின் தாயாகிய சித்ராபதியால் வற்புறுத்தப் பட்டிருக்கிறாள். "யாழினை மீட்டுவோன் இறந்துவிடுவானேயானால் அவனோடே யாழும் அழிந்துவிடுவதில்லை. வேறொருவன் அந்த யாழை மீட்டுங்கால் அது முன்போலவே அவனுக்கும் இசையின்பம் கொடுக்கும். அதுபோலவே கோவலன் இறந்துவிட்டமைக்காக நீ ஏன் வருந்த வேண்டும்? உன்னை ஏற்றுக்கொள்ள எத்தனையோ செல்வச்சீமான்கள் காத்திருக்கும்போது உன் கிடைத்தற்கரிய இளமையினையும், அழகினையும் ஏன் வீணாக்கிக்கொள்கிறாய். தேனில்லா மலரைவிட்டுத்தேனுள்ளமலரை நாடும் வண்டினம் போன்றவர்களல்லவா நாம்" என்று மாதவிபால் சித்ராபதி கூறியிருக்கிறாள். இவ்வாறு பலப்பல சமயங்களில் தன் கற்புக்குப் பிறர் இழுக்குக் கற்பிக்க முயன்றபோதெல்லாம் மாதவி அதற்கு இடங்கொடுக்காது கண்போலக் கற்பைப் பாதுகாத்து வந்திருக்கின்றாள். தன் காதலன் இறந்ததைக் கேள்வியுற்றதும் கணிகையர் வாழ்வையும், குலத்தையும் அடியோடு வெறுத்தவளாய், புத்தன் காட்டிய புண்ணிய வழியிலே பூங்கொடியாள் மாதவி வாழலானாள். உப்புக்கடலிடையே உயரிய முத்துக் கிடைப்பது போன்று பண்பற்ற பரத்தையர் குலத்திடையே பண்புடை மங்கையாக மாதவி திகழ்ந்தாள்.

கோவலன்மீது மாதவி கொண்ட காதல் உண்மைக் காதலானால் அவன் இறந்ததைக் கேட்டும் தான் மட்டும் ஏன் வாழவேண்டும்? கண்ணகிபோல காதலனோடே தானும் இறந்திருக்க வேண்டாமா?" என்ற வினாக்களை சில அன்பர்கள் கேட்க விழையலாம்.

> **மாதவியா? அவள் கோவலனைக் கெடுத்தவள். கற்பரசி கண்ணகியின் வாழ்வைக் கருக்கியவள்-என்றுதான் தமிழ் மாந்தர் அறிவர். அது பொய்க் கூற்று என வாதிக்கிறார் பேராசிரியர் 'ஈரோட்டான்', இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் மூலம் (ஆ-ர்.)**

ஆண் பெண் காணும் அற்ப உடலின்பத்திற்குப் பெயர் காதலாம். அக்காதல் கைகூடவில்லையானால் சாதலாம். மின்னல்போல் தோன்றி மறையும் சிற்றின்பத்தைக் காதல் என்ற பெயரால் அலங்கரித்து அறிவிழந்து அதிலே மயங்கித் திரிகிறது பேதையுலகம்! காதல் நிறைவேறவில்லை யென்பதற்காகக் கயிற்றில் ஊசலாட வேண்டுமென்ற அவசியமில்லை. தற்கொலையென்ற அவ்விழிசெயலை அறிஞர் உலகம் ஏற்காது. இகழத்தான் செய்யும். எனவே உன்னத வாழ்வை உலகப்பணியென்ற உயரிய குறிக்கோளுக்குஅர்ப்பணித்து அழியாப்புகழடையவேண்டும். இதைத்தான் மாதவியும் செய்துகாட்டினாள். கண்ணகி கோவலனுடன் இறந்தாளென்றால் அவளுக்கு அவனைத் தவிர வேறு யாரைப் பற்றியும் பொறுப்பில்லை. ஆனால், மாதவி - கணவனுக்காக மட்டும் வாழ்ந்தாள். ஆனால், மாதவியோ காதலன் கோவலனுக்காகவும், மகள் மணிமேகலைக்காகவும் வாழ வேண்டியவளானாள். கண்ணகியைப்போலத் தானும் இறந்திருந்தால் தன் மகளாகிய மணிமேகலையைத் தன் தாயாகிய சித்ராபதி கணிகையர் தொழிலிலே ஈடுபடுத்தி விடுவாள் என்ற அச்சம் மாதவி மனதிலே நீண்ட நாட்களாக இருந்தது. மேலும் மணிமேகலையைச் சோழநாட்டரசன் மகனாகிய உதயகுமாரன் காதலிக்கிறான் என்ற செய்தியும் மாதவியறிந்ததே. உதயகுமாரனுக்கு உடந்தையாக மணிமேகலையை அவன்பால் சேர்க்கத் தன் தாய் சித்ராபதி எப்பொழுதும் தயாராகக் காத்திருக்கிறாள் என்பதையும் மாதவி அறிவாள். இச்சூழ்நிலையில் தான் இறந்தால் தன் மகள் மணிமேகலை திண்ணமாய்த் தன் தாயால் பரத்தையாக்கப்படுவாள் என்று அஞ்சினாள் மாதவி. அஞ்சியதிலும் தவறொன்றும் இல்லை. காரணம் சித்ராபதி அவ்வளவு இழிந்த மனப்பான்மையையுடையவள் தான். கணிகையர் வாழ்வையே அடியோடு வெறுத்த மாதவி, தன் மகள் மணிமேகலை தனக்குப் பின் ஒரு கணிகையாக வாழ்வதை விரும்புவாளா? எனவேதான் கோவலனுடன் தான் இறவாமல் தூய துறவற நெறியை மேற்கொண்டாள். மாதவி இவ்வுலகில் கோவலன் இறந்தபின் வாழ விரும்பியதெல்லாம் தன் மகளின் நல்வாழ்விற்காக, நற்பெயரிற்காக! 'கோவலன் மகள் மணிமேகலை ஒரு தாசி'யென உலகம் பழிக்குமேல் அப்பழி மாதவியை மட்டுமின்றிக் கோவலனையும் சாராதா?' எனவேதான் அத்தகைய பழிச்சொல் தனக்கும் தன் காதலனும் கோவலனுக்கும் வரக்கூடாதென்பதற்காக — மகளின் நல்வாழ்வு காண மாதவி இப்பூவுலகில் வாழ்ந்தாள். இவ்வாறு மாதவி மணிமேகலையைக் காத்திராவிட்டால் தவக்கொழுந்தாய், சன்மார்க்கத்தின் சின்னமாய் மணிமேகலை இவ்வுலகில் திகழ்ந்திருக்கமுடியுமா? அவள் பெயரால் அரியதொரு காவியந்தான் தோன்றியிருக்கமுடியுமா?

இத்தகைய மேலான பண்புடைய மாதவிபால் அடிகளார் மட்டற்ற மதிப்புக்கொண்டிருந்தாரென்று கூறப்படுமானால் அதிலென்ன வியப்பிருக்கிறது? மாதவியின் கானல் வரிப் பாட்டால் கோவலன் மாதவியைப் பிழைபட எண்ணியவனாய் அவளை விட்டுப் பிரியும்போது, 'கோவலன் பிரிவிற்கு மாதவிதான் காரணம்' என்றெங்கே தவறாக உலகம் எண்ணிவிடுமோ என்றஞ்சிய அடிகளார், அவன் பிரிவிற்கு மாதவி காரணமில்லை, அவன் செய்த ஊழ்வினைப் பயனே என்று கூறி அக்குற்றத்திற்கு மாதவியை உரித்தாக்காது ஊழ்வினையை உரித்தாக்குகின்றார்.

எவ்வாறெல்லாம் முயன்றாலும் எள்ளளவு குற்றமும் மாதவிபால் நாம் காணமுடியாத அளவிற்கு அவளை ஓர் இணையிலாக் கதாநாயகியாக அடிகளார் ஆக்கியிருக்குந் திறன் உண்மையாகவே பாராட்டுதலுக்குரியதொன்றாம். கொண்ட காதலன்பால் குன்றா அன்புடன் குலப்பெண்ணினும் மேலாகக் குறைவிலா வாழ்வை வாழ்ந்து காட்டிய குணக்குன்றாம் மாதவி காட்சியளிக்கிறாள். இளங்கோ காட்டும் மாதவி நம்மிதயம் விட்டகலாதவள்; மனத்தினின்றும் மறையாதவள்; கருத்தினின்றும் களையாதவள். நம் உள்ளத்திரையில் என்றும் ஒளிவிடு உயிரோவியம்.

மாதவியைப் பற்றி நாம் எண்ணும் போதெல்லாம், மலர்ப்பஞ்சணையிலே தன் மனங்கவர் காதலனோடு அவள் மகிழ்ந்து நடத்திய காதல் விளையாட்டுகள், நாட்டுமன்னன்முன், நாட்டு மக்கள் முன் அவள் ஆடிய நடனங்கள் இன்பக் கோவலனுடன் கடற்கரையிலே பாடிய இனியகானங்கள், இவையெல்லாம் நம்மிதயக் கண்முன் இன்ப நடம்புரிகின்றன. காதலுக்காக, கலைக்காக வாழ்ந்த கற்புக்கனி மாதவி மாதவி வாழ்ந்து, மடிந்து ஆண்டுகள் பல கழியினும் இன்னும் அவள் நம் மிடையேதான் இருக்கிறாள் கலையின் உருவாக. கலைக்கும் காதலுக்கும் அழிவுண்டா? அவ்வாறானால் அவைகளுக்காக் வாழ்ந்த மாதவிக்கு மட்டும் அழிவேது?

''போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!''

எண்ணம்

மலர் 2 | 6-3-56 | இதழ் 38

ஈட்டி முனைகள்!

அமிர்தசரஸ் மாநாட்டுக்குப் போய் வந்த பிறகு, தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு மந்திரிகள் தலைதெறிக்கக் குதிக்கிறார்கள். பண்டித நேருவிடம் புதிய உபதேசம் பெற்று வந்தவர்களைப்போல, அந்த உபதேசத்தை முறியடிக்க எந்த எதிர்ச் சக்திக்கும் வலுவில்லை என்ற எண்ணத்தில் மந்திரி சுப்ரமணியமும், பக்தவத்சலமும் 'டார்வின் சித்தாந்தத்தை' மெய்ப்பித்துக் காட்டி, பூமாலையின் தரம் உணராப் 'பிறவி'களாக நடமாடுகிறார்கள்.

சர்வகட்சிக் கூட்டணி அமைந்ததிலிருந்து பக்தவத்சலமும் சுப்ரமணியமும் தங்களுடைய நரம்பில்லா நாக்கை நர்த்தனமாட விட்டிருக்கிறார்கள். தனி மனிதனின் உரிமைக்கும், பதவியிலிருப்போரின் உரிமைக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள்-தெரிந்துகொள்ளும் ஆற்றலில்லாதவர்கள் தமிழ்நாட்டுச் சபையில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்த இரண்டு ஆசாமிகள் தான்.

'அதிகாரம்' என்பதற்கு அர்த்தம் தெரியாத இந்தக் 'குடு குடுப்பை வக்கீல்'கள் கும்மாளம் போடுகிறார்கள். ஜனநாயக நாட்டில், மக்களுக்குத் தேவைப்படும் நன்மைகளைத் தேடித் தருவதற்கான உரிமைகளைப் பெற்றவர்களே மந்திரிகள் ஆவர். நம்பிக்கையின் பால் அளிக்கப்பட்ட அந்த உரிமையை, பசியெடுத்துத் திரியும் ஆச்சாரிய சீடகோடிகளான இவர்கள் தவறுகப் புரிந்துகொண்டு மக்களை அடக்கி யாளும் குருட்டுப் போக்கினராக உருவெடுத்திருக்கிறார்கள். உரிமை பெற்றவர்கள்-மக்களிடம் நல்ல வாய்ப்பைப் பெற்றவர்கள் நன்றியுள்ளத்தோடு நடந்துகொள்ள வேண்டியதுதான் முறை-மனிதப் பண்பு! இந்த இரண்டு மந்திரிகளிடமும் நன்றியுள்ளம் இல்லை என்பது மட்டுமல்ல, நாடாளும் உரிமையைத் தந்தவர்களுக்கே நாசம் விளைவிக்கும் தீக்குணமும் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பக்தவத்சலம்!-அவர் ஒரு ராணிமுடி-தேவட்டைப்பணம் - செல்லாக் காசு; பயன்படாது இனி எனப் பரணிலே கட்டிப்போட்ட களிம்பேறிய பாத்திரம், ரசம் உதிர்ந்த கண்ணாடி! ஆகவே அவர் துடிப்பார்-குதிப்பார்! அதில் அர்த்தமுண்டு! ''என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை நீங்கள்! ஆகவே நான் உங்களைத் திட்டத்தான் செய்வேன்-கதவைத் திறந்துவிட்ட ஆச்சாரியாருக்குக் கர்ணம்போட்டுக் காட்டுவேன்'' என்று அவர் பதில் கூறித் தப்பிக்க வழியுண்டு. தள்ளுங்கள் அவரை! ஆனால் சுப்ரமணியம் ஏன் அழிவுப் பாதையிலே காலெடுத்து வைக்கவேண்டும்? டில்லிக் 'கைலாசம்' தன் பக்கமிருக்கிறதென்கிற தைரியத்தில் சுப்ரமணியத்தின் சதுக்கச்சேரி, தலையாட்டி ரசிகர்கள் மத்தியில் நடந்துவருகிறது என்பது நமக்குத் தெரியும். பாவம், அவர் அறியமாட்டார், அந்தக் 'கைலாசமே' துரும்பு, தூசு என மக்கள் கருதிக்கொண்டிருப்பதை!

தட்சிணப்பிரதேச அமைப்பை அனைவரும் எதிர்க்கிறார்கள். ஒரு சிலர் தலைதப்பித்தால் போதும் என்றஞ்சி 'மௌனகுரு'க்களாயிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சூராதிசூரர் சுப்ரமணியம்தான் 'என் அபிப்பிராயம்-என் சொந்தக் கருத்து' என்ற தற்காப்பில் தட்சிணப்பிரதேச அமைப்பைத் தலை தாழ்த்தி வணங்கி, தனது அடிமை புத்தியைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்.

சொந்தக் கருத்து!-தனக்கு மாறுபட்ட கருத்துக் கொண்ட மந்திரிசபையில் சுயமரியாதை உள்ளம் கொண்டவர்கள் அங்கம் வகிக்கமாட்டார்கள் அவ்வாறு எத்தனையோ பேர் மேலைநாடுகளில் தங்களது சுயமரியாதையை அரசியல் வரலாற்றில் நிலைநாட்டிப் போயிருக்கிறார்கள். அத்தகைய புகழ் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அடிக்கடி கிடைக்கிறது சுப்ரமணியத்திற்கு. ஆனால் அமைச்சர் சுப்ரமணியம் அந்தப் புகழைக் காட்டிலும் 'அடியேன் தாசானுதாசன்' என்று கூறி அடிவட்டத்திலே நிற்போரிடம் பரிவட்டம் பெறுவதையே பேரின்பமாகக் கருதுகிறார். வகையற்றவர்கள், எதையாவது துணைக்கு வைத்துக்கொள்ளத்தான் செய்வார்கள். கேவலம், அதிலே சுப்ரமணியத்திற்குக் கிடைத்திருப்பது துரோக புத்தி.

எதையாவது பேசிக்கொண்டிருக்க வேண்டும்; எந்தக் குட்டையையாவது குழப்பிக்கொண்டிருக்க வேண்டுமென்பது ஆச்சாரியாரின் பிரதான கொள்கை. குருபக்தி மீறிப்போன காரணத்தால் 'திருவாளர்' சுப்ரமணியமும் அந்தக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கிவிட்டார். பத்திரிகை நிருபர்களை வலிய இழுத்து 'தட்சிணப்பிரதேசத்'தின் பெருமை குறித்து, அடுக்கிக் காட்டினார். ஒலிபெருக்கிப் பக்கம் நின்று ஒட்டைச்சங்கை ஊதிப் பார்த்தார், தனக்கென ஒரு செல்வாக்கு இருக்குமென நம்பி மூக்கறுபட்டார். மக்களிடம் கறந்தழும்பு பெற்ற எரிச்சலில்தான் இப்போது மாணவர்களின்மீது சீறிப்பாய ஆரம்பித்திருக்கிறார். மாணவர்களை அரசியலுக்கு இழுப்போர் துரோகிகளாம்! பாய்கிறார் பணப்பெட்டி அமைச்சர்.

மக்களுடைய அரசு என்று சொல்லிக்கொள்ளப்படுகிற இந்த நாட்டில்தான், அரசியலில் யார் யார் கலந்துகொள்வது என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். மக்கள் அரசுக்கட்டிலின் அச்சாணிகள் என்று சொல்லப்படுகிறார்கள். ஆனால் மாணவர்கள் மட்டும் ஏன் முற்றிலும் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமோ தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அப்படிக் கூறவில்லை. அரசியலில் குறிப்பிட்ட சில காரியங்களுக்கு மாணவர்களைத் தலையிடச் செய்வது கூடாது என்று சொல்லுகிறார்கள். இந்தக் கருத்தை எவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் 'மாணவர்கள் பிரஜைகள் அல்ல' என்று எண்ணக்கூடிய வகையில் ஒதுக்க நினைக்கிறார் அமைச்சர் சுப்ரமணியம். அவருடைய மனச்சான்றைக் (இருந்தால்) கேட்டுப் பார்த்தால் தெரியும், காங்கிரஸ் கட்சி எத்தனை முறை மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது ஒரு காலத்தில், என்பது.

அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர் மாநில மாநாட்டில் பேசுகையில் ''மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக் கூடாதென்கிறார்கள். அவ்வாறு கூறும் ஆட்சித் தலைவர்கள், ஏன் தங்களுடைய ஆட்சிமுறையை மாணவர்களும் சேர்ந்து கண்டிக்கும் வகையில் ஊழல் மலிந்ததாக வைத்துக்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள். அந்தப் புத்திமதியை இப்போதும் நினைவுபடுத்த விரும்புகிறோம். ''கனம் நிதியமைச்சரே! ஒதுக்கி வைக்கப்படவேண்டிய மாணவர்களே களத்திலே குதிக்கும் அளவுக்கு ஆட்சியைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். மக்களுக்கு எதிராக எந்தப் பிரச்சினையையும் என் சொந்தக் கருத்து என்று பேசாதீர்கள். தனிமரம் தோப்பாகாது! மாணவர்கள் ஈட்டி முனைகள்! அவைகளை ஏந்துவோர் ஏந்தினால் எதிரிகள் உதிரிகள் அத்தனைபேரும்......'' கவனமிருக்கட்டும்!

வெண்பாப் போட்டி 25

ஈற்றடி: கால்வாசி காணுது காண்

முடிவு தேதி 20-3-56

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கலைவிழாவில் அறிஞர் அண்ணா பேசிக்கொண்டிருக்கிறார்; வியர்வையைத் துடைத்துக் கொண்டிருப்பவர் சொற்செல்வர் சம்பத்.

பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி.

பதில் தருகிறார்

காந்திலால், சென்னை.

குஜராத்தி இனத்தில் வைணவர்கள், ஆதித்திராவிடர்கள் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா? அதற்கு விளக்கம் சொல்லுக

குஜராத்தி இனத்தில் வைணவர்கள் (வைணவ பிராமணர்கள்) தென்கலை சார்ந்தவர்கள். தென்கலையிலும், தீவிரமான கொள்கையும் பற்றும் ஈடுபாடும் உடையவர்கள். சமஸ்கிருதத்தில் வடகலை வைணவர் பொதுவாக வைஷ்ணவர் என்று குறிக்கப்படுகிறார்கள். தென்கலையாரோ சிறப்பாக ஸ்ரீ வைஷ்ணவர் என்று கொண்டாடப் படுகின்றனர். பழமை, கோயில் பூஜை உரிமைகள், சமுதாய உரிமைகள், பொதுமக்கள் ஆதரவு ஆகிய வகைகளில் இந்தியா எங்கும் தென்கலையாருக்கே முதன்மையும் சிறப்பும் இருந்து வந்துள்ளன. ஆயினும் ஆரிய ஆதரவும், அரசியல் ஆதரவும் காரணமாக சென்ற (400) ஆண்டுகளில் வடகலையார் செல்வத்திலும், பதவியிலும் மேலோங்கித் தென்கலையாரை முழுமூச்சுடன் எதிர்த்துத் தாக்கி, கோயில்களிலும், சமுதாயத்திலும் அவர்களைத் தாழ்த்தி தாம் மேம்பாடடைய அரும்பாடு பட்டு வருகின்றனர். இக்காரணத்தாலேயே, உண்மையில் பழமையான தென்கலையைப் புதிய கலை என்றும், இடைக்காலத்தில் எழுந்த தம் புதிய கலையைப் பழமையான கலை என்றும் மக்களிடையேயும், இலக்கிய, கல்வி வாயிலாகவும் பெரும் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாகவே, தென்கலையார் ஆதித்திராவிடர் என்றும் பல பிராமணரல்லாதார் ஆளிடமிருந்து இராமானுஜப் பெரியார் திரட்டிப் பிராமணர் ஆக்கப்பட்டவரென்றும் புரளி செய்கின்றனர். தென்கலையில் ஒரு சாராரை, அவர்கள் மத்தியானப் பறையர் என்றும் கூறுவதுண்டு. இவ்வகைப் பிரச்சாரத்தைச் சேர்ந்ததே குஜராத்தி வைணவர்கள், ஆதித்திராவிடர்கள் என்ற பொருமைக் கூற்றும்!

வடகலையார் சமஸ்கிருதத்துக்கும் சமஸ்கிருத வேதத்துக்கும் மட்டுமே மதிப்புக் கொடுத்து இராமானுஜர் பாராட்டிய ஆழ்வார்களைப் புறக்கணிப்பவர்கள். தென்கலையாரோ ஆழ்வார்களுக்கும் அவர்கள் பாடல்களுக்கும், தமிழுககும் முதலிடம் தருவோர்கள், குஜராத்தி சதி வைஷ்ணவர்கள் தமிழுக்கும், நம்மாழ்வார்க்கும், அவர் பிறந்த திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குருகூர் என்ற ஸ்ரீவைகுண்டத்துக்கும் கொடுக்கும் முதன்மை ஆரிய சமஸ்கிருதச் சார்பானவர்களிடம் எழுப்பிய புகைச்சலே, இந்தப் பிரசாரத்துக்குக் காரணம்,

★

தீ. எழிலன், உதகை.

"ஓரை என்பதற்குப் பொருள் என்ன? ஓரை கிரேக்கச் சொல் என்பது உண்மைதானு?

"மறைந்த் ஒழுக்கத்து ஓரையும் நாளும் திறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை"

என்ற இந்தத் தொல்காப்பிய அடிகளுக்கு விளக்கம் வரைக

"ஓரை" என்பது ஒரு மணிநேரம். அதாவது இரண்டரை நாழிகை. இது மணி குறித்த ஆங்கிலச் சொல் (ஹவர்) கிரேக்க மொழிச்சொல் (ஹோரா) ஆகியவற்றுடன் பொருள் தொடர்பும் சொல் தொடர்பும் கொண்டது.

"ஓரை" என்ற தமிழ்ச் சொல் ஹோரா என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிபு என்பர் சமஸ்கிருதப் பற்றுளர். மொழி ஆராய்ச்சியிலீடுபட்ட பல மேலைநாட்டறிஞர் சமஸ்கிருதச் சொல்லே கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது என்று கொள்ளுகின்றனர். அதற்கேற்ப "ஓரை" என்ற பாகுபாடும் அதனோடு இணையாக வானமண்டலத்தை 12 மனைகளாகப் (ராசி) பகுத்த பாகுபாடும், அலெக்ஸாண்டர் வரவின் பின்னரே சமஸ்கிருத வான நூலில் வளர்ந்தது என்று காட்டப்படுகின்றது. பொலிஷர் என்ற வானநூலார் இயற்றிய நூலில் சமஸ்கிருதச் சொற்களும், அவற்றிற் சரியான கிரேக்கச் சொற்களும் தரப்பட்டுள்ளன என்று கூறப்படுவது இதை இன்னும் வலியுறுத்துகிறது.

ஆயினும்.....அரிசி...இஞ்சி...திப்பிலி...முதலிய பல வாணிகச் சொற்களும் தமிழிலிருந்து கிரேக்கரால் மட்டுமன்றி, அவர்களைவிட பழமையான நாகரிகமுள்ள யூதர், பாபிலோனியர், எகிப்தியர், அஸிரியர் ஆகியவர்களாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாணிகச் சொற்கள் அல்லாத பழைய, புதிய, ஊர், பாண்டியன், சேலம் முதலிய சொற்களும், பெயர்களும் இன்னும் பழமையான காலத்திலேயே, சமஸ்கிருதமும், கிரேக்கமும் பிற ஆரிய மொழிகளும் தோன்றுத காலத்திலேயே பண்டை நாகரிகம் மேலை உலகில் பரவியிருந்தன. ஆகவே, "ஓரை" என்ற சொல் தமிழிலிருந்து நேரடியாக மேலை உலகிற்கும், நேரடியாகவோ, கிரேக்கர் மூலமாகவோ சமஸ்கிருத உலகுக்கும் சென்றிருக்கவேண்டும் என்று கருதலாம்.

தொல்காப்பியத்தில் கேள்வியில் குறிப்பிட்ட சூத்திரத்தில் "ஓரை" என்ற சொல் வருவது அதன் தொல் பழமையை மேலும் சுட்டிக்கின்றது கிரேக்கரும்; சமஸ்கிருத வானரும் நாகரிகமுற்று தமிழகத்தோடு தொடர்பு கொண்ட காலம் கடைச் சங்க காலமும், அதற்குப் பிற்பட்ட காலமுமே. சமஸ்கிருத இலக்கியத்துக்கு நெடுநாள் முற்பட்ட பாணினியையும் கிரேக்கத் தொடர்பு ஏற்பட்ட காலத்தவரே. தொல்காப்பியம் இவற்றிற்கெல்லாம் முற்பட்டது. பழமை எல்லை நமக்குத் தெரியாவிட்டாலும் "ஓரை" கிரேக்கச் சொல் அல்ல என்டதை நிலைநாட்டுதற்கு இது போதுமானது.

இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி ஆகியவற்ருல் ஏற்படும் இந்த ஊக முடிவை மொஹஞ்சோதரோவின் பழம் பொருள் ஆராய்ச்சித் துறை ஊன்றி வலியுறுத்துகிறது. "ஓரை" யோடிணையான வான்மனைப் பாகுபாடு மொஹஞ்சோதரோ முத்திரைகளில் இடம் பெறுகிறது. அது மட்டுமல்ல. வான்மனைப் பாகுபாட்டின் தொடக்கத்தையே இங்கு காண்கிறோம். இன்று நாம் பன்னிரண்டு மனை வகுத்துக் காண்கிறோம். மொஹஞ்சோதரோ அறிந்த வான்மனை எட்டே. இந்த வான்மனைகளே எட்டாயிருக்கும் பொழுது, சாமத்தையும், நாழிகையையும், விஞடியையும், தர்ப்பரையையும் பன்னிரண்டான போது "ஓரை"யும், கணமும், நொடியும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகவே, இன்று தமிழ் முறை என்று கூறும் நாழிகை முதலியன மிகப் பழந்தமிழ் முறையும், "ஓரை" முதலியன அதனினும் சற்றுப் பிந்திய பழந்தமிழ் முறையும் மட்டுமே என்று காணலாம். பிந்திய முறை கூட ஆரியர் வருவதற்கு ஆயிரக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஏனெனில் அது ஆரியர் வருமுன்பே மேலை உலகம் சென்று விட்டது.

★

மு. தமிழரசு, திருப்பத்தூர்.

தீர்த்தம், சாதம், வேஷ்டி, இவை எந்த மொழியைச் சேர்ந்தவை?

தீர்த்தம், சாதம், வேஷ்டி, ஆகிய சொற்களில் வேஷ்டி என்பது தமிழ் வேட்டி என்பதிலிருந்து தமிழக ஆரியர் புதுவதாக ஆக்கி இன்னும் சமஸ்கிருத அகர வரிசையிலோ பிறமொழி அகர வரிசைகளிலோ, புகுத்தாதிருக்கும் ஒருதிரிபுச்சொல்லாகும். வேட்டி என்பது தமிழ்ச் சொல்லே என்பதை வெட்டு என்ற அதன் பகுதியும், அதே பகுதிப் பொருளுடைய அறுவை (பகுதி அறு) துணி, துண்டு (பகுதி துணி, துண்டு படுத்து) முதலியன காட்டும்.

தீர்த்தம் சமஸ்கிருதத்தில் தண்ணீர் என்ற பொருளுடையதல்ல. பாவம் தீர்க்கிற என்ற பொருளே உடையது ஆகவே, அது தீர் என்ற பகுதியிலிருந்து சமயத்துறையினர் பண்டு வகுத்துக் கொண்ட ஒரு தமிழ்ச் சொல் என்பது தெளிவு. தண்ணீர் என்பதற்கு அதை வழங்குபவர் தமிழ்ச் சொல்லை ஒழித்து சமஸ்கிருதச் சொல்லைக் கொண்டு வரும் ஆர்வமுடையவர் என்பதன்றி, அதை புது வழக்குக்கு வேறு விளக்கம் கிடையாது. தவிர அதை வழங்குபவர் அதன தமிழ்ப் பொருளை மட்டுமின்றி சமஸ்கிருதப் பொருளையும் அறியாதவரே ஆவர். பலர் இத்தகைய வரை சமஸ்கிருத பற்றுளர் என்று தவருகக் கருதுகின்றனர். உண்மையில் அவர்கள் சமஸ்கிருதப் பற்றுளர்களுமல்ல, சமஸ்கிருத அறிவுடையோர்களுமல்ல. அவர்கள் தமிழ்ப் பகைமை, தமிழினப் பகைமை ஆகியவையே சமஸ்கிருத பற்றின் போர்வை கொண்டு அப்பெயரால் நடையிடுகின்றன.

சாதம் என்ற சொல்லை பிரசாதம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் சிதைவாகக் கொள்பவர் உண்டு. இங்ஙனம் கொள்வது மேற்குறிப்பிட்ட தமிழ்ப் பகைமை சமஸ்கிருத அறியாமையின்பால் பட்டதே. ஏனென்ருல் பிரசாதம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு சோறு என்ற பொருள் எங்கும் கிடையாது. அதன் பொருள் மகிழ்ச்சி, விருப்பம் என்பதே. கடவுளுக்கு விருப்பமான உணவு என்ற முறையில் கோயில் திருவுணவை பிரசாதம் என்று புதிதாக தாமாக வழங்கி, அந்தப் புது சமஸ்கிருதத்தை சாதம் என்ற சொல்லுக்கு மூலமாக்குகின்றனர். தமிழில் சாதம் என்ற சொல்லும் சாப்பாடு என்ற சொல்லும் இலக்கிய வழக்கில் இல்லாததால் அது தமிழ்ச் சொற்கள் அல்ல என்று பலர் கருதுகின்றனர். இந்த நிலையைப் பயன்படுத்தியே தமிழ்ப் பகைவர் ஆரிய மூலம் தேடப் புறப்பட்டுவிடுகின்றனர். இரண்டும் தமிழ்ச் சொல் என்பதை முதல் எழுத்து காட்டுகிறது அவற்றின் பகுதி இன்று தனிச் சொல்லாகத் தமிழில் இல்லாவிட்டாலும் ஊகிப்பது எளிது. கூப்பிடு, கூப்பாடு என்பதற்கு கூ பகுதியாதல் போல, சாப்பிடு, சாப்பாடு என்பதற்கு 'சா' பகுதியாயிருந்திருக்கக் கூடும். சா. என்ற பகுதி வேறு ஒன்று உண்டு. இற, மாள் என்ற பொருள்கள் உடையது. அம்மூன்றுமே நிறைவு, கடத்தல், பெருமையுறல் என்ற பொருள் சுற்றுவன. இன்றும் நிறையுணவையே சாப்பாடு என்று கூறுகிறோம். ஆகவே, சாப்பாடு, சாதம் ஆகிய இரண்டும் நிறை உணவு, முக்கிய உணவு என்ற பொருள்கள் கொண்ட 'சா' என்னும் பகுதியிலிருந்து வந்த தமிழ்ச் சொற்களேயாகும்.

வெளி வந்துவிட்டது!

தென்னரசு

எழுதிய

தேவாலயம்

— புதிய நாடகம் —

விலை ரூ. 1-4-0

@

அருணேதயம்,

சென்னை-14.

வானெலியில் கண்ணதாசன்

ஆசிரியர் கண்ணதாசன், 19-3-56ம் தேதி பகல் 12-மணிக்கு சென்னை வானெலியில் பேசுகிருர்.

பொருள் :—

உற்பத்திக்கு உற்சாகம்

எளிய பாடல்கள்

ஆசிரியத் தொடருக்கு..

அன்புள்ள ஐயா, வணக்கம்.

தமிழர் உரிமையின் பாற்பட்டு பிப்ரவரி 20-ல் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றதை யாவரும் அறிந்ததே. அன்று மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய போலீஸ்அதிகாரிகள் மிகக் கீழ்த்தரமாகநடந்துகொண்டது கண்டிக்கத் தக்கதாகும். குறிப்பாக எங்கள் 5-வது வட்டத்தில் கிளைக்கழகச் செயலாளர் கி. நலங்கிள்ளியும், நாங்களும், அமைதியைப் பாதுகாக்கும் பொருட்டும், பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடக்கும் பொருட்டும், 'ஆடை இல்லாத போலீஸாக இருந்து அமைதியைக் காப்பாற்றுங்கள்' என்ற நம்பொதுச் செயலாளர் ஆணைப்படி தெருத் தெருவாகச் சென்று பார்வையிட்டோம். அப்போது வண்ணை (H. 1) போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் காமாட்சி என்பவர் எங்கள் செயலாளர் நலங்கிள்ளியைப் பார்த்து "தடியா, எலும்பை நொறுக்கி விடுவேன்; உடம்பு பத்திரம்'' என்று கீழ்த்தரமாகவும் மட்டரகமாகவும் பேசி,தடியை ஓங்கிப் பயமுறுத்தியும் நடந்துகொண்டதைப் பார்க்கும்போது அவர் அந்நேரத்தில் சப் இன்ஸ்பெக்டராகக் காட்சியளிக்க வில்லை! சந்து முனையில் காட்சியளிக்கும் காலாடியை விடக் கேவலமாக நடந்து கொண்டார். இவ்வளவுக்கும் நாங்கள் செய்த குற்றம் பொது மக்களின் அமைதியைப் பாதுகாத்ததேயாகும்.

போலீஸ் என்றால் ஒழுக்கம், பெருந்தன்மை, கடமை, சாந்தம் என்று நாங்கள் பொருள் கொண்டதற்கு மாறாக அன்று காட்சியளித்தார்கள்.

மேலும், தேநீர் விடுதிகளில் ஓசியில் தேநீர் அருந்திவிட்டு "நீங்கள் திறந்து வையுங்கள், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'' என்று கடைக்காரரிடம் தங்கள் ''பெருந்தன்மை''யைக் காட்டிக்கொண்டார்கள். மக்கள் வரிப்பணத்தில் தாம் உயிர் வாழ்வதை இனிமேலாவது உணர்ந்து பொறுப்புடன் நடப்பார்களா?

அன்பன்,
இரா. இளந்தென்றல்,
சென்னை-21

◉

அன்புள்ள தென்றல் ஆசிரியர் அவர்களுக்கு. வணக்கம் ஐயா தங்களுடைய தொடரோவியமான வேங்லகுடித் திருவிழாவைப் படித்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையிலும் திராவிட முன்னேற்றக் கழக அனுதாபி என்ற முறையிலும் இம்முடங்கலை எழுதுகிறேன். பாலு தன் மனைவிக்குக் குஷ்டம் என்று தெரிந்தவுடன் கொந்தளிக்கும் உள்ளத்தோடு கடற்கரை செல்லுகிறான். பாலுவின் உள்ளத்தை மட்டும் கொந்தளிக்க விடாமல் படிக்கும் எங்கள் உள்ளத்தையும் கொந்தளிக்க விட்டுவிட்டீர்! காரணம்? தங்கள் வர்ணனையான அந்த செம்படவர் என்ற சொல்!

சமுதாயத்தில் சில விவரம் தெரியாதவர்கள், செம்படவர்கள் என்றால் அது ஒரு சாதி என்று கருதுகிறார்கள் அது மாதிரித் தாங்களும் நினைக்கிறீர்களா? அப்படித் தாங்களும் கருதுவதாய் இருந்தால் செட்டியார், முதலியார், நாயுடு, நாயக்கர், கிறிஸ்துவர். முஸ்லீம் சுருங்கக் கூறின் பார்ப்பனரைத் தவிர மற்ற எல்லா இனத்தாரும் செய்யும் ஒரு தொழிலைத் தமிழகம்,கேரளம், கன்னடம் சேர்த்து தட்சிணப் பிரதேசம் என்று பெயரிடுவதுபோல் இத்தனை சாதியாரையும் சேர்த்துச் செம்படவர் என்று பெயர் சூட்டுகிறீர்களா?

அது சாதிப் பெயர் அல்ல, தொழிலின் பெயர் என்று நினைத்தால் தொழிலும் அதுவல்ல. உழுது பயிரிடுபவருக்கு எப்படி உழவர் என்று அழைக்கிறார்களோ அதுபோல் மீன் பிடிப்பவர்களை மீனவர்கள் என்றே கருதுகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ இம்முடங்கல் எழுதியதில் தவறு இருந்தால் மன்னித்தருள்க.

சி. சந்திரன், ராயபுரம்.

[கடிதத்திற்கு நன்றி. செம்படவர் என்பதற்குப் பதிலாக பரதவர் என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம், (ஆ-ர்.)]

காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கலைவிழாவில் குமாரி ஈ. வி. சரோஜா குழுவினர்.

நூல் நயம்

வளரும் தமிழ்

தமிழ்மொழியின் சிறப்புப் பற்றிப் பலர் எழுதி வருகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் எழுதியுள்ளார்கள். ஆனால் பன்மொழிப் புலவர் கா, அப்பாதுரை அவர்கள் இந்நூலில் தமிழ் மொழியின் வனப்பு, வளப்பம், மொழியின் பண்பு, சொல்லாராய்ச்சி, பிறமொழிக் கலப்பு ஆகியவை பற்றி நல்ல ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

தமிழகத்தின் முற்கால எல்லை இன்றைய தமிழ்நாடு, மலையாள நாடு, அதற்குச் சற்று அப்பாலும் பரவியிருந்தது. தொல்காப்பியர் கூறிய தமிழ் எல்லைகூட செந்தமிழ் நாட்டெல்லை தானே யொழியத் திராவிட நாட்டெல்லை அன்று என்பதை வலியுறுத்தியுள்ளார் தம் ஆராய்ச்சியின்மூலம்.

பிறமொழியினால் தாய்மொழி பாதித்தல், இலக்கிய உலகில் தமிழனுடைய முன்னேற்றம், தென்னாட்டுக் கலைத்துறை தனித்தமிழில் பேணப்பட வேண்டிய இன்றியமையாமை, அதனால் ஏற்படும் நன்மை எழுத்துச்சீர்திருத்தம் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்துள்ளார். உலகில் முதல் முதல் எண் இலக்கம் வகுத்த மூன்று மொழிகளில் தமிழும் ஒன்று என்பதை நிலை நாட்டுகிறார்.

அறிஞர் அப்பாதுரையார் என்றவுடன் நடுநிலைமையை விட்டு விட்டு அவரது நூலை விமர்சனம் செய்கின்றன சில நாளிதழ்கள். அப்பாதுரையார் எந்த ஒரு முடிவையும் ஆராய்ச்சி இன்றியோ, ஆதாரமின்றியோ சொல்வதில்லை என்ற உண்மைக்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டு.

இந்த அரிய நூலில் உள்ள ஆராய்ச்சி மறுக்கமுடியாதது; மாண்புடையது. இந்த அரிய நூலை எழுதிய ஆசிரியரையும், இந்நூலை அருமையான முறையில் வெளியிட்டுள்ள அருணன் அவர்களையும் பாராட்டுகிறோம்.

விலை ரூ. 3-0-0

வெளியிட்டோர் : அருணோதயம்
சென்னை-14.

◉

புழுதிமேடு

திராவிடநாடு துணையாசிரியர் தோழர் இராம. அரங்கண்ணல் எழுதிய நூல் இது.இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளும் கதைகளும், வைதீக புரியினர் செய்த வஞ்சத்தை வகை வகையாக எடுத்துக் கூறுகின்றன. வீரத்தின் விளைவிடமாக இருந்த நாடு,வேத மோதிகளால் வீணாக்கப்பட்ட சோக வரலாற்றை எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

பூந்தோட்டம்-நமது கடந்த கால வரலாற்று வைரம். புழுதிமேடு இன்றுள்ள வெட்டவெளி.வைதீகம் பூந்தோட்டத்தைப் புழுதிமேடாக்கிப் பூரிப்பதை இந்த இரு கட்டுரைகள்மூலம் விளக்குகிறார். ஐயன் குளம்,செல்லக்கிளி, அப்போதுகூட, சொறி சிரங்கன், சாணக்கியன், முதலிய கதைகளின்மூலம் ஆரியம் செய்த அட்டகாசத்தை - அக்கிரமத்தை அம்பலப்படுத்துகிறார்.

ஆசிரியரின் விறு விறுப்பான நடையும், பொருளும் அழகும் பொதிந்த சொற்றொடர்களும், நூலைச் சிறப்பிக்கின்றன. ஆரியம் 'வில்லன்'களே இருந்துவந்து அக்கிரமங்கள் புரிந்ததை வரலாற்று அடிப்படை கொண்டு எழுதியுள்ளது பாராட்டற்குரியது. புழுதிமேடு எல்லோரும் படிக்கவேண்டிய புத்தகம். இதைப் படித்தாலாவது நமது 'பூந்தோட்டம்' இனியும் 'புழுதிமேடா'காமல் தப்பிக்க வழியுண்டு.

விலை ரூ 1-4-0

வெளியிட்டோர் : அன்புப்பதிப்பகம்
பொறையார், தஞ்சைமாவட்டம்.

◉

கிளி பறந்தது

ஒப்பிலான் ஒப்பற்றவள். சீமான் வீட்டுத் தோட்டக்காரனின் வளர்ப்புப் பெண். உத்தமன் அந்தச் சீமானின் மகன். மணம் ஆனவன் என்றாலும் ஒப்பிலாளை அழைத்துக் கொண்டு மதுரை வந்துவிட்டான். உத்தமனது தாயின் குறுக்கீட்டால் ஒப்பிலாள், அவனைப் பிரிந்து பம்பாய் சென்றாள். பாடகி ஆனாள். பெரும்புகழ் பெற்றாள்.

பம்பாயில் உள்ள ஒப்பிலாளைக் காண உத்தமன் அங்கே சென்றான். அவன் அருமை நண்பன் கோபு இதை வெறுத்தான். கோபுவின் சிற்றப்பா — டாக்டர் வெங்கட்டு பம்பாயில் இருந்தார், அவர் ஒப்பிலாளைக் காதலித்தார். ஆனால், நிறைவேறவில்லை. இறுதியில் ஒப்பிலாள் டாக்டர் வெங்குட்டுவின் அண்ணன் மகள் என்பது, கோபுவின் அக்காள் என்பதும் வெளியாகிறது. டாக்டர் மனம் வருந்துகிறார். கோபுவும் வருந்துகிறான்.

உத்தமனை மறந்து - ஊரை மறந்து-உலகை மறந்து ஒப்பிலாள் மறுபடியும் பறந்தேவிடுகிறாள்.

இந்த நவீனத்தை நீரோட்டம் போன்ற நடையில் எழுதியுள்ளார் திரு. நாகமுத்தையா. ஒரு தத்துவத்தைக் கொண்டு, நிகழ்ச்சியை விவரிக்கும் விதம் பாராட்டுதற்குரியது. விறு விறுப்பான கதைப் போக்கு - நல்ல சொற்களைக் கையாளல் ஆகியவை நாகமுத்தையாவின் தனி உரிமை. "ஒருவன் ஒருத்தியை உடலின்பம் ஒன்றிற்காகவே காதலிக்கவேண்டும் என்பதில்லை'' என்ற தத்துவத்தை ஆணித்தரமாக விளக்கியுள்ளார் உத்தமன், ஒப்பிலாள் ஆகிய இருவரின்மூலம். உயர்ந்த நவீனத்தைத் தமிழ்நாட்டுக்குத் தந்த இதன் ஆசிரியரையும்,புதிய அமைப்பில், நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட்ட 'பாரி நிலையத்'தாரையும் பாராட்டுகிறோம். இவ்வித அமைப்பில் வெளிவரும் புத்தகங்கள் இன்னும் பக்கம் கூடுதலாக இருந்தால் நல்லது என்று கருதுகிறோம். எல்லோரும் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூ. 1-0-0

விற்பனை உரிமை: பாரி நிலையம்,
சென்னை-1.

—தமிழ்ப்பித்தன்.

★ கங்குல்பாற் புகுந்த கள்வன் ! ★

விரி பூஞ்சோலை! காவினடையே அழகான தண்மலர்ப் பொய்கை! பொய்கையின புறமெங்கனும் வெண்மணற்குன்றம்! மலர்க்காவின் நறுமணம்! பொய்கையின் தண்மை! வீசும் காற்றின் மென்மை! ஆகியவை தென்றலுக்கணி செய்து விளங்கின. கங்குல் கனைசுடரோன் கால்சீயும் நேரம்! போதுடையப்போம் மலர்மொட்டின், மென் வனப்புமிக்க, அவ் வஞ்சிக்கொடியிடையார், கையிலே கலமெடுத்த, இடையொடுக்கி சிங்காரப் பேச்சுடனே தம் ஒய்யாரக் கைவீச்சில், தளிர் நடை பயின்று, நீரெடுக்க, அப்பொய்கை நோக்குகின்றனர்.

பொய்கையில் தம் பொன்னுடல் இன்புற நீர் விளையாடுகின்றனர். அக்காட்சியைக் காணக் கதிரவனும் விரைகிறான்! பகலவனின்பண்பற்ற செயல் கண்டு, கருமேகம் கதிரவனை மறைக்கிறது. நீராடிக் கன்னியர்கள், நனைந்த மென்துகிலை ஒரு கையால் கொண்டு முகத்தில் படிந்த கருங்கூந்தலை ஒரு கையால் நீக்கிக்கொண்டு, கரையேறுகின்றனர்.

எத்துணை நேரம் கார்மேகத்தால், கனைசுடரோனுக்குத் திரையிட முடியும்! கருங்கூந்தலை நீக்க, கன்னியரின் முகங்கள், கருமேகத்தை நீக்கி மெல்ல எட்டிப் பார்க்கும் கதிரவனைப் போலிருந்தன.

'நேரமாகிவிட்டது; நீரெடுத்து வீடு செல்வோம் விரைந்து,' என்று ஒருத்தி கட்டளையிட, அதை ஆமோதிப்பதுபோல் எல்லோரும் நீரெடுத்துக் கரையடைகின்றனர். செல்லவும் ஆயத்தமாகிவிட்டனர்.

அதோ ஒருத்திமட்டும், எதையோ பறிகொடுத்துத் தவிப்பவள்போல், ஏன் இன்னும் கலங்கிய வண்ணம் நின்றுகொண்டிருக்கிறாள்?

'ஏனடி நின்றுகொண்டிருக்கிறாய்? ஆழ்ந்த யோசனை போலிருக்கிறது. ஏது புத்தராகப் போகிறாயோ!', என்று அவளிடம் கிண்டல் செய்தாளொருத்தி.

'இல்லையில்லை, பெண் தானே இவள்! ஒருவேளை மணிமேகலையாகத் துறவு பூணத் துணிந்துவிட்டாளோ என்னவோ! அப்படித்தானேயடி!,' என்று கேலி பேசினாள் இன்னொருத்தி.

'குறும்பு இருக்கட்டும், என் குடம் எங்கே?,' என்றாளப்பாவை கெஞ்சும் தோரணையில்.

'உன் குடமா! எங்கே வைத்தாய்? தேடிப் பார்த்து நீருடன் வாடி' நாங்கள் போகிறோம்...'

பயனொழிந்த பழுமரம் நீங்கும் பறவையினம்போல, அவ்வழகினங்கையாளைத் தனித்துவிட்டு நீங்கிவிட்டது அக்கன்னியர் குழாம்.

ஒன்றும் புரியாத நிலையிலிருந்த அந்நங்கை நல்லாளை, 'இதுதானே உன் குடம்' என்ற ஆண்குரல் திடுக்கிட வைத்தது. திகைப்புற்றாள். திரும்பி நோக்கினாள்.

கம்பீரமான தோற்றம். கட்டுறுதியான உடல். சொட்டும் இளம் பருவம். களைகட்டியிருந்தது அவன் பார்வையில். இப்பொழுது அவள் தலைவியாகி விட்டாள்.

ஒரே பார்வைதான். மறுபார்வையை நிலத்தில் செலுத்தினாளப் பாவை.

ஏனோ அவ்விடத்தை விட்டகல அவள் துணியவில்லை. ஏதோ ஒரு சக்தி அவளை இழுத்துப் பிடித்து நிறுத்தியது. அச்சக்தி, அவளுள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் அன்புருவில்மைகிறது. காற்று வீசுகிறது. மலர்கள் மஞ்சம் விரித்தன்ன, மணல் மேட்டில் உதிர்கின்றன. சங்குகள் ஈன்ற முத்துக்கள்போல் அமைகின்றன அம்மணல் மேட்டின் மலர்க் காட்சி.

அன்பு மலர்கிறது. காதலாக மாறுவதையும் அவள் உணர்கிறாள். தலைவன் நிலையும் இத்தன்மைத்தே.

ஊடல் காண்போர்க்கமையும் மஞ்சம்போல் அமைகிறது, மலர் பரந்த அம்மணற்குன்றம்!

மலை நிகர்த்த தோளான், சிலை நிகர்த்த விழியாள் முதற் சந்திப்பு! இந்நிலையில் சிலநாள் கழிகிறது. அதற்குப் பிறகு, பலமுறை சந்தித்திருப்பர் என்பது ஐயமில்லை

தலைவியின் நடத்தையில் காணப்படும் மாற்றத்தையும், தலைவனொருவனுடன் களவொழுக்கம் பூண்டொழுகுவதையும், தலைவன் யார், எத்தன்மைத்தோன் என்பதையும், அவள் வாயிலாகவே தோழி அறிந்து, அவள் தாய்க்குத் தெரிவிக்கிறாள். மகளின் போக்கினையும், அவள் உள்ளக்கிடக்கையையும், கணவர்க்குப் புலப்படுத்துகிறாள் தாய்.

மகளின் நல்வாழ்வில் நாட்டங்கொண்ட அப்பெற்றோர், மகள், அவளுக்கென வரித்துக்கொண்ட மணாளனையே, அவளுக்கு வாழ்க்கைத் தலைவனாக்குகின்றனர்.

தலைவன் தலைவியை, நாம், முதன் முதலில் சோலையில் சந்தித்தோம். நாம் அவர்களை இரண்டாவதாகச் சந்திப்பது மணவறையில் தலைவன் தலைவி ஊடல் பலவற்றை, சங்க இலக்கியங்களில் கண்டிருக்கிறோம். எனினும் இத்தகைய ஒரு விந்தையான ஊடலை நாம் இது வரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

தலைவன் வண்டாரும், மணமலர்மாலையுடன் மணவறையின் மஞ்சத்தில் வேட்கையுடன் அமர்ந்திருக்கிறான். தண்மலர் சூடிய மொய்குழலாள், கையில் கனிகள் நிறைந்த தட்டுடன் மடநடை பயின்று வருகிறாள் தலைவனை நோக்கி. கங்குற் போழ்தில் தன்னுளம் கவர்ந்த இன்னுயிர்க் கள்வனிவன் என்ற எண்ணம் அவள் மனதில் பளிச்சிட்டு மறைகிறது. தலைவியே முதலில் அமைதியைக் கலைக்கிறாள்.

'...ம்...ஏன் மௌனம்? இங்கு, நீங்கள் வந்த காரியம்...என்ன?' எதிர்பாராத, தலைவியின் இந்த வினா, வரையென வைரம் பாய்ந்த அவன் உள்ளத்தில் பல வினாக்களாக உருவெடுக்கிறது. அவன் முகத்தில் மட்டும் திகைப்பின் சாயல். இப்படிப்பட்ட நேரத்தில், இத்தன்மையான ஒரு வினா, எவருடைய உள்ளத்தைத்தான் உலுப்பாது! இருப்பினும் தலைவன் சமாளித்துக்கொண்டு,

'வியப்புக்குரிய என் விந்தை நங்கையே! யான் பசித்துவந்தேன்...!'

'ஓ! பசித்துவந்தீரோ! எனின் நீர் நயப்பதெப்பொருள்?', இன்னும் ஒரு வினா, கேட்டுத் தலைவனைத் திணறவைக்க முயலுகிறாள் அவ்விந்தைக்குரிய நங்கை.

'இஃது ஏது சங்கடமாகப் போய்விட்டதே!', என்று மனதிலெண்ணிய வண்ணம், சாமர்த்தியமாக,

'கங்குற் கதிரோனின் விரிபொற்கதிரனைய மேனியளே! நின் அமிழ்தினிய, அழகின் நலம் முழுதும் வேண்டி நயந்துவந்தேன்...!' என்று விடையிறுக்கிறான் தலைவன்.

அறையில் இருதிணையின் சிரிப்பொலிகள் எதிரொலித்து விரியும் காட்சி!

தலைவன் மடியில் தலைவி! இதுவரையில் தான் காட்சியினை நமக்குக் காட்டுகிறார் புலவர். கம்பராக இருப்பின் ஊடலொடு கூடற்காட்சியின் விளக்கத்தினையும் பெறலாம் ஆனால், மேற்கண்ட காட்சிக்குரிய, கருத்துமிக்க பாடலைத் தந்தவர், தமிழ்ப் பண்பாட்டில் ஊறிய ஒரு பெருந்தமிழ்ப் புலவர். பெயர் திருத்தக்கத் தேவர். அவரியற்றிய பாடலொன்றின் காட்சிதான், மேலே நீங்கள் கண்ட காட்சி.

இதோ அப்பண்புமிக்க பாடல் :

"கங்குற் பாற்புகுந்த கள்வனிவனெனக் கதுற்றுழ்ந்த
தொங்கலான் மூன்கையாத்துச் சொல்லுநீ வந்ததென்ன
நங்கையான் பசித்துவந்தேன் எப்பொருள் நயப்பதென்றாள்
கங்குலிழ் மேனியாய் நின்னணிநல வமிழ்தமென்றான்."

[சீவகசிந்தாமணி. பாடல் : 1988.]

இரா. கோதண்டராமன்.

★ ★ ★ ★ ★



பிப்ரவரி 20-காரைக்குடி கல்லுக்கட்டிப் பெருங்கடைகள் மூடிக்கிடக்கின்றன.

பிப்ரவரி 20-மதுரையில் மாபெரும் ஊர்வலம்.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

18

சுந்தரத்திற்குத் திருமணப் பேச்சு நடக்கிறதாம். ஏறக் குறைய முடிந்த மாதிரிதானாம். பெண், நல்ல சிவப்பாம். 'சொர்ணக்கிளி' மாதிரி என்று ஊரிலே சொல்கிறார்களாம்! என்ன இருந்தாலும், இந்திரா பார்த்து,'பிடித்திருக்கிறது'என்று சொன்னால்தான் கட்டிக்கொள்வானாம்! அதனால் இந்திராவும் பாலனும் உடனே புறப்பட்டு, புதுக்கோட்டைக்கு வரவேண்டுமாம்!-இப்படி, சுந்தரமே எழுதியிருந்தான். அண்ணி வரப் போகிறாள் என்று "நாத்தி"க்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. பாலன் சீக்கிரம் வர மாட்டானா, சங்கதியைச் சொல்ல மாட்டோமா என்று அவள் துடித்தாள். நல்ல மனதுக்கு இப்படிப் பட்ட அரிப்பு ஏற்படுவது வழக்கம். எதையும் யாரிடமாவது சொல்லவேண்டும்.

இந்திரா கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். 'பெண் நல்ல சிவப்பு' என்ற வரியை மீண்டும் மீண்டும் படித்தாள். நல்ல வேளை! நம்மைப் போல் இல்லையே. உம்! நம்மைப் போல இருந்தால்தான் என்ன! நம் கணவரைப் போலத்தான் அண்ணாவும் நல்லவர்" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டாள். அடிக்கடி வாசலுக்கு ஓடி, பாலன் வருகிறானா என்று பார்த்தாள். ஒரு தடவை போய்ப் பார்த்தபோது பாலனுக்குப் பதிலாக டாக்டர் வந்து கொண்டிருந்தார். இந்திரா அவரை வரவேற்று உட்கார வைத்தாள். அவசர அவசரமாக "ஐயா, இந்தச் சிரங்கு ஆறுவதற்கு இன்னும் எத்தனை நாளாகும்?" என்று கேட்டாள். டாக்டரை ஆச்சரியமும் திகைப்பும் சேர்ந்து தாக்கின. "சிரங்கா! சரி சரி, பாலன் அப்படிச் சொல்லியிருப்பார் போலிருக்கிறது" என்று சமாளித்துக் கொண்டு, "இன்னும் ஒரு வாரத்திற்குள் தீர்ந்து விடும்" என்று ஒரு பொய்யைக் கூறிவிட்டு, ஊசியைக் கழுவுவதற்குக் கொஞ்சம் வெந்நீர் கேட்டார். இந்திரா வெந்நீர் கொண்டுவர அடுப்பங்கரைக்குச் சென்றாள். அவள் சென்றதும் டாக்டரின் கூட வந்த கம்பௌண்டர் டாக்டரைப் பார்த்து, "இது சிரங்கா சார்! பார்த்தா பெருவியாதி போலிருக்கே" என்றார். டாக்டர் மெதுவாக, "அதுதாய்யா! சொன்னால் கண்ணீர் விடுவாங்களேன்னு அப்படிச் சொல்லியிருக்காங்க" என்றார்.

"ஐயோ பாவம்! இந்தச் சின்ன வயசிலேயே பெருவியாதி வந்துட்டுது. இன்னம் எவ்வளவு நாள் வாழவேண்டியிருக்கு!" என்று வேதாந்த ரீதியில் வியாதிக்கு இரங்கினார் கம்பௌண்டர்.

வாழவேண்டிய நாட்கள் இவ்வளவு என வரையறுத்து வைத்துவிட்டது போலவே மனிதர்கள் பேசுகிறார்கள். கம்பௌண்டரின் வார்த்தையை அனுதாபத்தோடு வரவேற்றுத் தலையாட்டினார் டாக்டர். தாங்கள் எங்கிருந்து கொண்டு பேசுகிறோம் என்பதை அவர்கள் சிந்திக்கவே இல்லை. யார் காதுகளில் அது விழக்கூடாது என்று அவர்கள் மனதார விரும்பினார்களோ அவள் காதிலேயே விழுந்து விட்டது. ஆம்; அப்போதே கதவருகில் வந்து நின்ற இந்திராவின் காதுகளில் டாக்டர் சொன்ன துன்பமயமான செய்தி விழுந்தது. இந்திரா துடித்தாள். என்றுதான் அவள் துடிக்காமலிருந்தாள்! அவள் கையிலிருந்த வெந்நீர்ப் பாத்திரம் நழுவி விழுந்தது. அவள் உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. கால்களில் கொட்டிய வெந்நீர் வேறு கால்களைப் பொசுக்கியது. சத்தம் கேட்டு எழுந்து வந்தார் டாக்டர். பைத்தியம் பிடிக்கும் நிலையிலிருந்த இந்திராவைக் கண்டார். "பெருவியாதி! பெருவியாதி!!" என்று மாறி மாறிக் கதறினாள் இந்திரா. டாக்டர் அதிர்ச்சியடைந்தார். ஆனாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல், "கவலைப் படாதே அம்மா. எதுவாயிருந்தாலும் நான் தீர்த்துவைக்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே" என்று ஆறுதல் கூறினார். பெருவியாதிதான் என்று முத்திரை போட்ட பிறகு "தீர்த்து வைக்கிறேன்" என்ற வார்த்தை அவளுக்கு கொஞ்சங்கூட ஆறுதல் தரவில்லை. அதற்குமேல் அவர் சொன்ன ஆறுதல் வார்த்தைகளுக்கும் பலனில்லை. இந்திரா முட்டி மோதிக்கொண்டு கதறினாள். இரவிலே பாலன் விலகிப் படுத்ததும், வேண்டா வெறுப்பாகக் காபி குடித்ததும், வழக்கமான அன்பிலிருந்து வழுக்கிச் சென்றதும், வர்ணனைகளுக்கு ஒரு முடிவு கட்டிக்கொண்டதும் அவள் மனதிலே தோன்றிச் சுட்டெரித்தன. "இதே பயங்கரப்பிளவு நீடித்து விடும். இனி நம்மைத் தொட மாட்டார். அருகிலே கூட வைத்துக் கொள்ள மாட்டார். வாழா வெட்டி! நாம் வாழாவெட்டி!" அவள் விம்மி விம்மி அழுதாள். "அழுகிறவர்களை அழ விட்டு விட்டு நடப்பது நடந்துகொண்டுதானிருக்கிறது உலகத்தில்! அழுபவர்கள்தான் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அழுகையை நிறுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, நடப்பதைத்



தடுக்க நினைப்பது தனி ஒருவருக்குச் சாத்தியமே அல்ல”!— என எண்ணிய டாக்டர், அதைச் சொல்ல முடியாமல் சிலையாகச் சமைந்தார். அவர் பிள்ளை குட்டிக்காரர். இந்திராவின் வயதில் அவருக்கொரு பெண்ணும் இருக்கிறாள், தங்கையுமிருக்கிறாள்.

அழுதுகொண்டிருந்த இந்திரா ‘சடக்’கெனத் திரும்பினாள். “டாக்டரய்யா, இந்த வியாதி திருமா? திரக்கூடிய வியாதியா? தீர்த்துவைக்க முடியுமா உங்களால்? அய்யா, நீங்கள் நல்லாயிருக்கணும். உங்களைக் கும்பிடுகிறேன். ஏற்கனவே நான் கறுப்பு. பரிதாபத்துக்கு இறங்கித்தான் என் கணவர் என்னிடம் அன்பு செலுத்துகிறார். அதோடு இந்த வியாதியும் சேர்ந்தால், என்னை அவர் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். உங்களைக் கும்பிடுகிறேன். என்ன செலவானாலும் சரி; இந்த நோயைத் தீர்த்து விடுங்கள். அய்யா! அய்யா!” என்று பொருமினாள்.

டாக்டருக்குக் கொஞ்சம் தெம்பு பிறந்தது. “உறுதியாகச் சொல்கிறேன். இந்த நோயைத் தீர்த்து வைக்க வில்லையென்றால் என் தொழிலையே விட்டுவிடுகிறேன். போதுமா?” என்றார். அது போதாது அவளுக்கு. அவர் தொழிலை விட்டால் யாருக்கு லாபம்? அவள் தொல்லை தொல்லைதானே!— இந்திரா அப்படி நினைக்கவில்லை; அவரை நம்பினாள். உறுதி வார்த்தைகளையும் நம்பாத அளவுக்கு அவள் உலக அனுபவம் பெற்றவளல்ல. “நிச்சயமாகச் சொல்லுகிறேன்” என்று தொடங்கி, “சர்வ நிச்சயமாக” என்று தொடர்ந்து, எழுதிக் கொடுத்தால்தான் நம்பிக்கை பிறக்குமென்கிற அளவுக்கு வளர்ந்து, எழுத்துக்கும் மதிப்பில்லாமல் எந்த உறுதியையும் யாரும் மதிக்கமுடியாத அளவுக்குச் சென்றுவிட்ட பரபரப்பான மனிதப் புண்பில் இந்திரா பழக்கப் பட்டவளல்ல. டாக்டரின் முதல் உறுதியே அவளுக்கு நம்பிக்கை தந்தது. ஓரளவுக்கு அமைதி பெற்ற இந்திராவின் வலது கையில் ஊசி போட்டுவிட்டு, ஆறுதல் மொழியும் கூறிவிட்டு டாக்டர் வெளியேறினார்.

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த இந்திராவைப் பெரு வியாதி என்கிற எண்ணம் மீண்டும் மீண்டும் தாக்கியது. கண்ணாடியில் முகத்தைப் பார்த்துப் பார்த்துக் கலங்கியபடி உட்கார்ந்திருந்தாள். சமையலில்லை, அதனால் சாப்பிடவில்லை. சுமார்

காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கலைவிழாவில் தமிழரசுக்கழகத் தலைவர் கிராமணியார் பேசிக்கொண்டிருக்கிறார்.

இரண்டு மணிக்கு பாலன் வந்தான். “அத்தான்” என்று அலறினாள் இந்திரா. பாலன் திகைத்தான். “ஏன் அழுகிறாள்? உண்மை தெரிந்துவிட்டதா?”- பாலன் தயங்கி நின்றான். ‘படார்’ என்று அவன் கால்களிலே போய் விழுந்தாள் இந்திரா. பாலன் அவளைத் தொட்டுத் தூக்கினான். அவன் கண்களிலே கண்ணீர் ததும்பி நின்றது அவளைக் கட்டிலில் உட்கார வைத்தான். ஆறுதல் கூறினான். மனம் விட்டுப் பேசினான். “இதற்காக என்னைக் கைவிட்டு விடமாட்டீர்களே” என்று, நினைத்ததை நினைத்தபடியே கேட்டு வைத்தாள் அந்தப் பேதை. பாலன் மனம் கரைந்து கொடுத்தது. “சேச்சே அப்படியெல்லாம் பேசாதே! இதே வியாதி எனக்கு வந்திருந்தால் நீ என்னை வெறுப்பாயா? அந்த இருதயம் எனக்கில்லையா?” என்றான் பாலன். சிந்தனையை எங்கெங்கோ கொண்டு வைத்திருந்த அவன், அந்தப் பரிதாபத்திற்குரிய பாவைக்காக அதை மீட்டுக் கொண்டு வந்திருந்தான். உண்மையை டாக்டர்தான் சொல்லியிருக்கவேண்டும் என அவனால் யூகிக்க முடிந்தது. அந்த இரண்டு இதயங்களும் கொஞ்ச நேரம் பின்னியும் பிரிந்தும் தெளிந்தன. அந்த நேரத்தில், “என்ன ஆனாலும் உன் அருகிலேயே இருப்பேன்” என உறுதி கொடுத்தான் பாலன். அமைதிகொண்ட இந்திரா அன்போடு ஊரிலிருந்து வந்த கடிதத்தை எடுத்துப் பாலனிடம் நீட்டினாள். படித்துப் பார்த்த பாலன் “இன்றிரவே ஊருக்குப் புறப்படுவோம். வருவதாகத் தந்தி கொடுத்து விடுகிறேன்” என்று பரிவோடு கூறினான்.

அன்றிரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் பாலனையும் இந்திராவையும் முதல் வகுப்பில் சுமந்து கொண்டு பறந்தது.

12

கசமுசப் படலம்

பட்ட காலிலே படும்
கெட்ட குடியே கெடும்
—வேதாந்தம்.

திருச்சியில் மாறி, இண்டோ-சிலோன் எக்ஸ்பிரசில் ஏறி, காலை எட்டு மணிக்குப் புதுக்கோட்டை வந்து சேர்ந்தார்கள் பாலனும் இந்திராவும். ஸ்டேஷனில் சுந்தரம் மாப்பிள்ளைமாதிரி நின்று கொண்டிருந்தான். இந்திராவையும் பாலனையும் இரு கை நீட்டி வரவேற்றான். சிரித்துக் கொண்டே கீழே இறங்கிய இந்திராவின் முகம் சிறிது நேரத்தில் கறுத்தது. தாளமாட்டாத ஒரு துன்பச் சேதியை வேண்டியவர்களிடம் புதிதாகச் சொல்லும் போது தொண்டை கனக்கும். அடைத்தது, இந்திராவுக்கு. சொல்லாமலும் சப்தமில்லாமலும் கண்ணீர் விட ஆரம்பித்தாள். புரியாத சுந்தரம், “என்ன இந்திரா” என்று பதறியபடியே கேட்டான். அதற்குள் இடைமறித்த பாலன், “உஸ்... ஸ்...ஸ்டேஷனிலா அழுவது? பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? பேசாமல் வா” என்றான். அங்கே கிண்டிக் கிளறிக் கேட்கக்கூடாது என்பதற்காகச் சுந்தரம் இந்திராவின் முகத்தைப் பார்த்தபடியே காரில் ஏறினான். எல்லோரையும் ஏற்றிக்கொண்டு கார் பறந்தது.

சுந்தரம் நிலைகொள்ளவில்லை. அழுகையின் காரணத்தை அறிந்துகொள்ளத் துடித்தான். பாலனும் கூட வந்திருப்பதால் பாலன் ஏதாவது திட்டியிருப்பான் என்று எண்ண இடமில்லை—சுந்தரம் குழப்பத்திலிருக்கும்போதே, கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. வரவேற்பு வைபவம் நடந்தது. வரவேற்பில் அத்தனைபேரும் காட்டிய சுறுசுறுப்பு அடுத்த அரை மணி நேரத்தில் மறைந்தது. மங்கையற்கரசி தன் மகளின் நிலைக்காக அழத்தொடங்கினாள். மகளை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். தாயின் கண்களுக்குப் பிள்ளைகளின் எந்த வியாதியும் ஆபாசமாகத் தெரிவதில்லை. தாய்! அதுதான் உலகம்!

சிறிதுநேரம் சென்றதும் அந்த வீட்டிலே வேதாந்தம் விளையாட ஆரம்பித்தது. “இது ஒன்றும் செய்யாது; சீக்கிரமே மறைந்துவிடும்” என்று திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

ஆனால் இந்திராவின் பெரு வியாதி இன்னுமொரு நாடகத்தை நடத்தப் போகிறது என்பதை அவர்கள் யாரும் சிந்திக்கக் கூடவில்லை.



அறிஞர் அண்ணாவும் சி. வி. சி. டி. வேங்கடாசலம் செட்டியாரும் உட்கார்ந்திருக்கிறார்கள். நிற்பவர் தமிழ் விரிவுரையாளர் வ. சுப. மாணிக்கம்.

தொடரும்

அரசியல் நாட்குறிப்பு

பிப்ரவரி 22 மக்களின் சம்மதத்தின் பேரில் விசால ஆந்திரா ஏற்படும் என்று பண்டித பந்த் அறிவித்தார்.

அண்ணுமலை நகர் தி. மு. க. மாணவர் கிளையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது அறிஞர் அண்ணு, என். வி. நடராசன் ஆகியோர் பேசினர். மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 200 ஐ செயலாளர் பு. இராமசாமி, அண்ணு அவர்களிடம் தந்தார்.

◉

பிப். 23. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையின் மறைவு குறித்து எழுத்தாளர் சங்கம் வருத்தம் தெரிவித்தது.

ராஜ்யச் சீரமைப்பு சம்பந்தமாகப் பொதுமக்களிடம் வாக்கெடுப்பு எடுக்கலாம் என்று பண்டித நேரு மக்கள் சபையில் அறிவித்தார்.

◉

பிப். 24. பீகார் வங்க இணைப்பை எதிர்த்து மேற்கு வங்கத்தில் இடதுசாரிகள் ஹர்த்தால் செய்தனர். ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

◉

பிப். 25 பாங்காங்கில் 'ஜனநாயக அபிவிருத்தி' இயக்கத்தின் ஒரு பகுதியான எதிர்க்கட்சியாளர்கள் சிலர், தேசிய தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பூரண சட்டசபை வேண்டுமென்றும், நியமன உறுப்பினர்களை அகற்றிவிட வேண்டுமென்றும் கேட்டு, ஒரு வாரமாக உண்ணு விரதம் இருந்து வருகின்றனர்.

◉

பிப். 27. இரான் மன்னர் ஷாவிற்கு காசி இந்து சர்வகலா சாலை 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற கவுரப் பட்ட மளித்தது.

◉

பிப். 28. இன்று காலை மக்கள் சபை சபாநாயகர் திரு. மாவ்லங்கர் இயற்கை எய்திஞர்.

◉

பிப். 29. நெய்வேலியில் உர உற்பத்திச் சாலை நிறுவப்படும் என்று மக்கள் சபையில் உற்பத்தி மந்திரி சதிஷ் சந்திரா அறிவித்தார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் பரிசோதனைகளின்கடைசிக் கட்டம் சென்னை பத்திரிகாசிரியர்களின் முன்னிலையில், நெய்வேலியில் துவங்கிற்று. 'நம்நாடு' இதழ் சார்பாக துணையாசிரியர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சென்றிருந்தார்.

பிலிப்பின்ஸின் மாஜி ஜனுதிபதி டாக்டர் விரிஞே காலமானுர்.

◉

மதுரையில்
மாபெரும் கலைவிழா
11-3-56 ஞாயிறு இரவு
10 மணிக்கு
மதுரை தமுக்கம் மைதானம்
திறந்தவெளி அரங்கில்
அறிஞர் அண்ணு
அவர்கள் தலைமையில்
கலையுலகச் செல்வங்கள் ஒரே
மேடையில் நடிக்கும்
நாடகப் பெருவிழா
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
டி. ஏ. மதுரம் குழுவினர் நடிக்கும்
"விலாங்கு மனிதன்"
நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். ராமசாமி குழுவினர்
நடிக்கும்
அறிஞர் அண்ணுவின்
"வேலைக்காரி"
(நாடகத்தில் சில காட்சிகள்)
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர்
நடிக்கும்
"அசோகன்"
(ஓரங்க நாடகம்)
நடிப்புச் செல்வர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
குழுவினர் நடிக்கும்
கலைஞர் கருணுநிதியின்
"மணிமகுடம்"
(நாடகத்தில் சில காட்சிகள்)
மற்றும் நடிகை ராஜசுலோசனு
முதலியோர் பங்கேற்கும் நாடக
நிகழ்ச்சிகள் நடைபெறும்.
கட்டணம் : ரூ. 5, 3, 2, 1.
அமைப்பாளர்: எஸ். முத்து.

தி. மு. க. உறுப்பினர் சேர்த்தல்

பொதுவேலை நிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்தாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்கவேண்டும் என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் 18-3-56 வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ம் நாளிருந்து 18-ம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக் கொண்டு தகுதியுள்ள மிகவர்ன உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேம்.

18-3-56-ம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக் கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக்கழகம் - மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச்சு 15-ம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

'அறிவகம்'

காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கலைவிழாவில் டி. வி. ரத்னம் குழுவினர்

★ ★ ★

கொலம்பஸ் சாதித்தது

தபால் இலாகாதாரை நீங்கள் நம்பினீர்களானுல், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது மாத்திரம் அல்ல; ஒரே இரவில் முழு நீளத் தாடியையும் வளர்த்துக் கொண்டார் என்றும் நீங்கள் நம்பத்தான் வேண்டும்.

1893-இல் கொலம்பஸ் சாதனை பற்றித் தபால் தலைகளை வெளியிட்டிருக்கிருர்கள். அவற்றில் ஒரு ஸெண்ட் தபால் தலையில், அமெரிக்கக் கரை தெரிவதைக் கொலம்பஸ் காண்பதாக ஒரு படம் இருக்கிறது. அதில் தாடிமீசை ஒன்றுமில்லாமல் சுத்தமாக முகசவரம் செய்துகொண்டிருக்கிருர். அடுத்த நாள் கரையில் அவர் வந்து இறங்கும் படம் இரண்டு ஸெண்ட் தபால் தலையில் இருக்கிறது. அதில் அவருக்கு முழுநீளத் தாடி வளர்ந்திருக்கிறது!

—'யுவர் லைஃப்'

★ ★ ★

"உயர் எண்ணம் குலுங்கும் சோலை
இன்று
தாழ்ந்து கிடக்கும் வெறும் பாலை!"
இதை விளக்கும் ஒப்பற்ற நூல்
புழுதிமேடு
விலை ரூ. 1-4-0
கழிவு : 25 சத வீதம்.
இராம. அரங்கண்ணல்
தீட்டியது
வெளி வந்துவிட்டது.
— அச்சில் —
ஒப்பற்ற சரித நவீனம்
வெண்ணிலா
தீட்டியது:
இராம. அரங்கண்ணல்
அன்பு அச்சகம், பொறையார், தஞ்சையாவட்டம்

கே. எஸ். பாண்டியன் படிப்பகம் நூல் நிலையம், இலவச வாசகசாலை, திருவல்லிக்கேணி.

சோத்துப் பாதுகாப்புக் குழு அமைப்பு கடந்த 12-1-56ல் நடைபெற்ற படிப்பகத்தின் "செயற்குழு"க் கூட்டத்தில் கா. அபபாதுரை எம். ஏ. எல். டி., கண்ணதாசன், கே. எஸ். அருணுசலம். பி. வீ. அரங்கநாதம், சண்பகவேல் ஆகிய ஐவரும் படிப்பகத்தின் நிரந்தர "சோத்துப் பாதுகாப்புக் குழு"வினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிளி பறந்தது
— நாவல் —
ஆசிரியர் நாகமுத்தையா
விலை ரூபாய் ஒன்று
விபரங்கட்கு
பாரி நிலையம்,
59, பிராட்வே, :: சென்னை-1.

★ வெள்ளையர் நாடு வினு எழுப்புகிறது !

★ நேருவின் வாரிசு யார் ?

★ அண்ணு கேட்டதை புவனம் அறியுமா?

★ 'விருந்தாளி மந்திரி' விந்தையுறுகிருர் !

முடி மன்னன் முடங்கல்

தோகை, நீண்ட அமைதிக்குப்பின் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். அதுவும் உனது கடிதத்திற்குப் பதிலாக எழுதுகிறேன். 'என்ன செய்துவிட்டேன்? ஏன் எனக்குக் கடிதம் எழுதக்கூடாது?' என்று உன் இதயம் குரல் எழுப்புவது எனக்குக் கேட்கிறது செல்வமே! மௌனமும், மனஊடலும் சில பல வேளைகளில் எவ்வளவு பெரிய விபரீதத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகின்றன? தோகை, உனக்குத்தான் தெரியுமே, என்னுடை இந்த இளம்பிராயத்திற்குள்ளேயே எவ்வளவு பெரிய மனிதர்களின் பொல்லாப்புக்குஆளாகியிருக்கிறேன்! பிள்ளைப்பூச்சியாக இருந்தால் மண்புழுவுக்குச் சமம் என்று ஒதுக்கிவிடுகிருர்கள், கொடுக்குள்ள தேளாக உருவெடுத்தால், 'விஷஜந்து' விலகிப்போவோம் என்று ஓடிவிடுகிருர்கள்! இது உலகத்தாரின் மன இயல்பு என்று பெரும்பான்மையோர் முடிவெடுத்திருக்கும்போது நான் மட்டும் அதிலிருந்து தப்பமுடியுமா? ஏன் இந்தப் பழைய கதைகளெல்லாம்?

கடிதத்தில் நீ கிளப்பிவிட்டிருக்கும் அரசியல் பிரச்சினை, தென்னுட்டைப் பொறுத்த வரையில் புதிதல்ல என்பதே என் முடிவு. பலருக்கு இது புரியாது - தெரியாது. தெரிந்தாலும் அதைத் தீக்குழம்பாகவே கருதுவர் தமிழகத்து பாரதப் புதல்வர்கள். நேருவுக்குப்பின் யார்? என்ற கேள்வி லண்டன் நகரிலே அடிபட்டிருக்கிறது.

'நேருவின் வாரிசு யார்?'-என்று இங்கிலாந்து தேசத்து மக்கள் கிருஷ்ணமேனனிடம் கேட்டார்கள். அந்தக் கேள்வி அவருக்குப் புதிதாகப் பட்டிருக்கிறது. ஆச்சரியப்படவும் செய்திருக்கிருர் அந்த 'அரசியல் தபால்காரர்'! இந்தியத் துணைக்கண்டத்தில் அப்படி ஒரு பிரச்சினை எழும்பவில்லை என்பது போலவும், லண்டன் நகரிலே கேட்டதற்காகத் தான் ஆச்சரியப்படுவதாகவும் பதில்சொல்லியிருக்கிருர். நீயும் நினைத்திருப்பாய் இந்தியாவில் அப்படி யாரும் கேட்கவில்லை என்பதாக. அப்படி நினைத்திருந்தால், தயவுசெய்து அந்த எண்ணத்தை அழித்துக்கொள்-இருத்திக் கொண்டுவிடு. பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன், 'பண்டிதரே உமக்குப் பிறகு யார் இருக்கிருர்கள்?' என்று முதன் முதலாகக் கேட்டவர்கள் தென்னுட்டு மக்கள் தான். தென்னுட்டு மக்கள் என்று பொதுப்படையாகச் சொல்லிவிட்டேன். சர்வத்தோடு சொல்லுகிறேன், திராவிடர் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள்தான் முதன் முதலாக இந்தக் கேள்வியைக் கேட்டார்கள், ஓராண்டு காலத்திற்குமுன்பு சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில்! நம்மிடம் பத்திரிகை பலமில்லை. நமது கருத்தைத் திரித்திக் கூறும் 'சத்ருக்குணம்' கொண்ட மித்திரனும், நன்றிகெட்ட 'தினமணி'யும் இப்படிப்பட்ட செய்திகளையா பிரசுரிக்கின்றன?

கிருஷ்ணமேனன் ஆச்சரியப்படுகிருராம்! அதை நீ எனக்கு எழுதியிருக்கிருய். மேனன் ஆச்சரியமா பட்டார்? அந்த இடத்தில் ஆச்சரியம் என்ற போர்வையால்தான் தனது பலவீனத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மூடிக்கொள்ள முடிந்தது.

நேருவுக்குப்பின் யார்? – ஏன், அங்கே சரியான பதிலைச் சொல்லியிருக்கலாமே மேனன்! முடியாது! அதனுல்தான் ஆச்சரியத்தை வலிய இழுத்துப் போர்த்திக்கொண்டிருக்கிருர் கேரளத்தார். நேருவுக்கு வாரிசு நேருதானும்! ஆங்கில நாட்டில் போய், அசட்டுத்தனத்தால் தனது அறியாமைக்குத் திரைபோடப் பார்த்திருக்கிருர்.

நேரு, சிரஞ்சீவியாக வாழவேண்டுமென்று மேனன் ஆசைப்படலாம்! அதுவல்ல இங்கே பிரச்சினை. அரசியலிலே சம்பந்தப்பட்ட - அதுவும் வெளிநாட்டு அரசியலில் ஈடுபாடுள்ள ஒருவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் கொடுத்த பதில் சிறுபிள்ளைத்தனமானது என்றுகூடச் சொல்லலாம்.

நேருவுக்கு வாரிசு நேருதானும்! நேரு என்ன ஆழ்வார் பட்டம் பெற்றவரா? 'ஆழ்வாராதி'களே காலத்தால் அழிந்து, துரோகிகளாக்கப்பட்டுவிட்டனரே! தோகை, பொறுப்புள்ள தலைவர்கள் இப்படிப் பேசுகிருர்களே என்று விசனப்படுவாய் என்பதை நானறிவேன்.

கிருஷ்ணமேனன், லண்டனிலே தான் கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிட்டதாகவே நினைத்துக்கொண்டிருப்பார். அகிலத்தைக் கட்டி ஆண்ட ஆங்கில நாட்டார் அவ்வளவு எளிதிலே ஏமாந்துவிடக் கூடியவர்களல்ல.

நேருவுக்கு வாரிசு நேரு! இந்த வாக்கியத்திலிருந்து நேரு பெருந்தலைவர் என்று முடிவுகட்டியிருப்பார்கள். ஆனுல் அதோடு இருந்திருக்க மாட்டார்கள். நேருவுக்கு வாரிசு நேரு என்ருல், நேருவுக்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டத்தை அடக்கியாளுவதற்கு ஆளில்லை என்றுதான் தீர்மானித்திருப்பார்கள். மேனன் மறைமுகமாகச் சொன்னதும் அந்தப் பொருள்படத் தானே! நீ என்ன நினைக்கிருய்? 'அவருக்கு இணை அவர் தான்' என்ருல் அவரைப்போல வேருருவர் இல்லை-இனியும் பிறக்கப் போவதில்லை என்று தானே பொருள்! நேருவுக்குப் பிறகு இந்தியாவில் ஆள் இல்லை என்பதை மேனன் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டார் வேறு வார்த்தைகளின்மூலம்!

தோகை, லண்டன் நகரத்து மக்கள் இப்படி ஒரு இக்கட்டான கேள்வியைக் கேட்டுவிட்டார்களே என்று மேனன் மெய்வருந்தியதாகத் தெரியவில்லை. "நேருவைப் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் லண்டனிலே பிரச்சினையா? மகிழ்ச்சி மகிழ்ச்சி!" என்று 'ராஜபார்ட்'காரர் தோரணையில் மெச்சிக்கொண்டிருக்கிருர். உண்மையிலேயே அந்த நாட்டவர்கள் நேருவின் பேரிலும், இந்தியத்துணைக் கண்டத்தின் பேரிலும் அக்கறை கொண்டுதான் அப்பேர்ப்பட்ட கேள்விகளைக் கேட்டிருப்பார்கள் என்று என்னுல் நம்ப முடியவில்லை. பெரிய பெரிய ராஜதந்திரிகளையெல்லாம் பெற்றெடுத்த நாட்டுக்காரர்கள் அவர்கள். இமைமூடித் திறப்பதற்குள் பகை ஒழித்துப் புன்னகை புரியும் அரசியல் நளினத்தை அதிகம் பெற்றவர்கள். அத்தகையவர்கள் வெளிநாட்டுப் பிரச்சினை குறித்துக் கேள்வி கேட்கிருர்கள் என்ருல், அது, அன்பு, ஈகை, இரக்கம், நல்லெண்ணம்,-இவைகளால் உதட்டுக்கு இழுத்துவரப்பட்ட வினுவாக இருக்கமுடியுமா?

வெள்ளை நாட்டார் கேட்ட அந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு அலசிப் பார்த்தால், அவர்கள் நேருவைப் பற்றிப் புதியதொரு கருத்துக் கொண்டிருக்கிருர்கள் என்றுகூடச் சொல்லமுடியும் நம்மால்! ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்ட எந்த நாட்டுத் தலைவரும், தனக்குப் பின்னுல் ஆளும் பொறுப்பேற்கக் கூடியவரைத் தட்டிக்கொடுத்து அடிக்கடி மன்றத்திற்கு அழைத்து வந்து ஒளி விளக்காக்குவார்கள். ஜனநாயக நாட்டில்! ஆனுல் பண்டிதநேரு அப்படி யாருக்கும் பயிற்சி அளிக்கவில்லை என்பதை லண்டன் நன்கு புரிந்துகொண்டிருக்கிறது. காந்தியார் இருக்கும் போது நேருவை அவரது வாரிசு என்ருர்கள். ஆனுல் நேருவின் காலத்தில் யார் இருக்கிருர்கள்? மேனனுல் விரல் மடக்கமுடியுமா? ஆகவே பண்டித நேரு தன் காலத்தோடு நாட்டின் பெருமை ஒழிந்து போகட்டும் என்று எண்ணியே நல்லதோர் தலைவனை வளர்க்கவில்லை போலும் என்ற எண்ணத்தில் தான் வெள்ளையர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார்கள் என்று ஏன் கொள்ளக்கூடாது?

மொத்தத்தில் இந்தியாவின் எதிர்கால நிலையை மேனன் தெரிவித்துவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும். நேருவுக்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டம் சுதந்தர நாடுகளைக் கொண்ட துணைக்கண்டமாகப் பரிணமிக்கப் போகிறது என்பதை ஒருசிலர் புரிந்துகொள்வார்கள். நீயும் அவர்கள் எண்ணிக்கையில் இடம்பெற்ருல் நான் மகிழ்வேன்.

அன்புள்ள

முடிமன்னன்.

அடுத்த தொடர்கதை

ஏப்ரல் 17-ம் தேதி இதழில்

ஆரம்பமாகிறது !

தோழர் ப. நெடுமாறன் எழுதிய

'தென்பாண்டி வீரன்'

தென்றல் இலக்கியப் போட்டியில்

முதற்பரிசு பெற்ற பெருங்கதை

வரலாற்றுப் பின்னணி கொண்டு வரையப்பட்ட

சுவைமிக்க நவீனம்.

★

தென்றல் - சென்னை-6.

மனைவிக்கு... கணவர்க்கு...

6

— நாக முத்தையா —

அன்புக் கமலா,

'நவில்தொறும் நூல் நயம்போல்' என்பது வள்ளுவர் வாக்கு, படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தரும் பண்பு புத்தகங்களுக்கு உண்டு என்பது எவ்வளவு உண்மை தெரியுமா? ஆனால் புத்தகங்களைப் படிப்பதால் பெறுகிற இன்பத்தைவிட கற்புடைய மனைவியை நினைத்த மாத்திரத்தாலே பெறுகிற இன்பம் அளவிடற்கு அரியதாகும். இது என் அனுபவம்.

பொருளற்று, இழிநிலை எய்திய பின்னரும் நான் இவ்வுலகில் வாழ விரும்புகிறேன் என்று சொன்னால் அதற்குக் காரணம் நீதான்.

> "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

எனப் பாடிய புலவனைப்போல,

> "அருந்தொகையே உன்னால் அடைவேன் இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

என்று நானும் கவிதை பாட விரும்புகிறேன்.

தமிழைப் பற்றிப் பேசும்போது எனக்குப் பண்டைக்காலத்துத் தமிழச்சியின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது.

அவள் ஒரு பரத்தை-விபச்சாரி. வீதியில் நின்றுகொண்டிருந்தாள். அது தேரோடும் வீதி; வருவோர் போவோர் அனைவரையும் எதிர் நோக்கி எறிட்டுப் பார்த்தபடி பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு சிறு பையன் அந்த வழியாக வந்தான். ரொம்பவும் அழகோடு விளங்கினான். மழலை மொழிகளை உதிர்த்துக்கொண்டு மனம் போனபடி தத்தளித்து நடந்தபடி வந்துகொண்டிருந்தான். 'நூலைப்போலச் சேலை, தாயைப் போலப் பிள்ளை, என்பார்களே அது போலவே பெற்றவளை அப்படியே வடித்தெடுத்த அந்தச் சிறுவன், எழிலோடு திகழ்ந்தான். பரத்தை அச்சிறுவனின் எழிலில் மயங்கி நின்றாள். 'என் உயிரை ஒத்தவனே இங்கு நீ வருவாய்' என்று அழைத்தாள். சிறுவனும் அவளிருந்த இடம் நோக்கிச் சென்றான். அவனை அவள் தன் மார்பகத்தே அணைத்துக் கொண்டு முத்தத்திற்குமேல் முத்தமாகப் பொழிந்து தள்ளினாள். பிள்ளையை முன்னே நடக்கவிட்டு, பின்னே வந்துகொண்டிருந்த தாய் இதைக் கண்டாள். பெற்றவள் பார்த்துவிட்டாளே என எண்ணிய பரத்தை பதறிப்போய் அஞ்சி ஒடுங்கி நின்றாள். இதையும் காண நேரிட்ட தாய், அப்பரத்தையைப் பார்த்தாள். ஒரு விதத்தில் பரத்தைப் பெண் அவளுக்குச் சகக்கிழத்தியாகும். அப்படி இருந்தும் அவள் வைதாளா? வசவுபாடினாளா? இல்லை. ஆனால் அவள் சொன்னாள் புன்னகையோடு:-

> "குற்றம் இல்லாத குறுமகளே! நீ எதற்காக மயங்குகிறாய்? நீயும் இச்சிறுவனுக்கு ஒருமுறையில் தாய் தானே? உன் பிள்ளையைக் கொஞ்சி விளையாட நீ மயங்கி மருள்வதின் காரணம் என்ன?"

இதனைக் கேட்ட பரத்தை தலைவியின் உயர்வான போக்கை எண்ணி அவள் முன்னர் தலைகுனிந்து நின்றாளாம்.

இத்தகைய தமிழ்ப் பரம்பரையில் வந்த நீயோ, நான் தப்பித் தவறி கெட்ட காலத்தின் அறிகுறியாக, கேள்வி மறந்து பரத்தையோடு தொடர்பு கொண்டுவிட்டேன் என்பதற்காக என்னையே வெறுத்து ஒதுக்க விரும்புகிறாய்.

அந்தக் காலத்துப் பெண்ணைப்போல என்னை மட்டுமல்ல என் வைப்பாட்டியைக்கூட நீ விரும்பி ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என நான் கூறுவதாக எண்ணிவிடாதே! ஆனால் என் தவறை மன்னித்துவிட்டு என்னையாவது ஏற்றுக்கொள்ளுவாய் என்று தானே விண்ணப்பம் செய்கிறேன். இதைச் செய்து தருவதில் உனக்கென்ன சங்கடம்?

'நூலும் அந்நூலால் கோக்கப் பட்ட மணியும்போல இணைந்து வாழ்வோம்' என்று சொல்லிய அந்த வேசி இப்போது என்னிடம் பணமில்லை என்றதும் துரத்தி ஓட்டுகிறாள்.

இத்தகைய சூழலில் வாடுகிற என்னை மீளவும் வருத்தாது-குழி கண்ட புண்ணில் கோல்கொண்டு குத்தாது-உன் இன்முகம் காட்டி நன்மொழிகள் சில வரைவாய் என நம்புகிறேன்.

நான் உறும் தொல்லைகளை அந்தக் காலத்திலும் ஒரு பயல் அனுபவித்திருக்கிறான். அவன் புலவன். அதனால் அனுபவத்தைப் பாட்டாகப் பாடிவிட்டான். இதோ பாடல்:

> "பொத்தநூல் கல்லும் புணர்பிரியா அன்றிலும்போல்
> நித்தலும் நம்மைப் பிரியலம் என்றுஉரைத்த
> பொற்றொடியும் போர்த்தகர்க்கோடு ஆயினள் நல்நெஞ்சே!
> நிற்றியோ போதியோ நீ!"

அறிவால் பெற்ற உண்மையைவிட அனுபவத்தால் பெற்ற உண்மை நீடு நிற்கும் வலுவுடையது. ஆதலின் நான் அனுபவ வாயிலாக உன் மேன்மை அறிந்த பிறகே இவையெல்லாம் எழுதுகிறேன். எனவே, என்னை மன்னித்து ஒரு வரியாவது எழுதுவாய் என நம்புகிறேன். மன்னித்திடுவாய் என் மாண்புக்குரியவளே, நுவலற்க, நொடியில் வருகிறேன்.

உன்னன்புள்ள,
மாவண்ணன்

— சுப. முத்தையா —

அன்புள்ள அத்தான்,

உங்களின் ஐந்தாங் கடிதம் வந்தது. உடலில் வலுவில்லாதவர்களுக்குப் பிராணிகளின் உடலிலிருந்தும் தாவரப் பொருள்களிலிருந்தும் சாற்றை எடுத்து மருந்தாக்கித் தந்தவரும் மருத்துவர்களைப்போல, நீங்கள், அறிவில் குறைந்த எனக்கு அறிவு நூல்களிலிருந்து ஆதாரப் பொருள்களைத் தேடி எடுத்துத் தந்து மருத்துவப் பணிசெய்து வருவதை எண்ணுங்கையில் என் உள்ளம் காணும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

இளகாத இரும்பு என் நெஞ்சம் என்று எழுதி இருக்கிறீர்கள். பிரம்பால் அடித்தவனைவிடக் கையால் அடித்தவன் மகராசன் என நீங்கள் எழுதியதைப் பார்த்தால் நான் பிரம்பால் அடித்தவளைவிடப் பேய்க்குணம் படைத்தவள் என்று சுட்டிக்காட்டுவதுபோல இருக்கிறது. இலக்கியம் பலப்பலவாகப் படித்த உங்களுக்கு, கணவனைப் பிரிந்தமையால் காதலி படும்துயர் எத்தகையத் என்பதை எப்படி எண்ணிப் பார்த்துத் தெரிந்துகொள்ள இயலாமற் போய்விடும் என என்னால் தெரிந்துகொள்ள இயலவில்லை. 'பசப்பு நோய்' 'பசலைப்பிணி' என்றெல்லாம் ஏடுகளில் படித்திருப்பீர்கள். அது தரும் துயரத்தை அனுபவத்தால் உணர்ந்தால்தான் உங்களுக்கு என் மனப்புண்பு தெரியவரும். நான் பட்ட துயரங்கள்...?

என்னை அல்லால் பிறிதொரு பெண்ணை ஏறெடுத்தும் பாரேன் என்று சொல்லிய நீங்கள், ஏன் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் திறமையை இழந்துவிட்டீர்கள்? ஒரு முறை பிழை செய்தவர்கள் இன்று திருந்திவிட்டதாகச் சொல்லி, பிறகும், செய்த பிழையைத் திரும்பவும் செய்யத் துவங்கிவிட்டால்...! அதை நினைக்கும்போது ஆண்களைப் பற்றியே அவமதிப்புக் கொள்ளும்படியான மன நிலையைக் கொள்ளுகிறேன். ஆண்களோடு பெண்கள் வாழ்ந்துவரும் இன்றைய நிலைமையைக் காணும்போது 'எச்சிற் பிழைப்பு' என்ற சொற்கள் நினைவுக்கு வருகின்றன. எச்சிற் பிழைப்பு என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும் என்றால் மானங் கெட்ட வாழ்வு என்று கூறலாம்.

'எச்சிற் பிழைப்பு' என்று எழுதும்போது எச்சிலைப் பற்றி நீங்கள் சொன்ன பழம் பாடல் நினைவுக்கு வருகிறது. கன்றுக்குட்டிக்குப் பால்குடிப்பித்துப் பின்னர் கறந்த இனிய பாலும், புணர்ச்சிக் காலத்துப் பெண்களின் வாய்நீரும், பறவை கொத்தி வீழ்த்திய பழ வகைகளும், வேட்டையின்போது வேட்டை நாய் பற்றிக் கடித்து வீழ்த்திய பிராணிகளின் மெல்லிய ஊனும் ஆகிய இவைகளின் பொருட்பயனை உணர்ந்தவர்கள் இழிந்து நோக்காமல் விலையுயர்ந்த நற்பொருளாகவே கொள்ளுவார்கள் என்னும் கருத்துப் பொதிந்த பாடலை நீங்கள் குற்றாலம் சென்றிருந்தபோது கூறினீர்களே, நினைவு வருகிறதா? இதோ பாடல்: திரும்பவும் நினைப்பூட்டுகிறேன்:-

> "கன்று இனிதுஊட்டிக் கறந்த தீம்பாலும்,
> கலவியின் மகளிரும், பறவை
> தின்றதீங் கனியும், வேட்டையின் ஞமலி
> களித்திடுகின்ற மென்றசையும்
> ஒன்றையும் எச்சில் என இகழ்ந்து உரையார் உணர்ந்தோர்
> ...."

இப்படி எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள். கூந்தலை மலர்வனம் என எண்ணிய வண்டுகள் தலையில் கூட்டங் கூட்டமாகப் பறந்துவந்து தங்க, அதுகண்ட தலைவன் 'அட கொலைகார வண்டுகளா' கூந்தலுக்கும் வனத்துக்கும் வேறுபாடு தெரியாமல் என் காதலியின் தலையில் குவிந்து கூடிக் கழுத்தை ஒடித்துவிடவா நினைக்கிறீர்கள்? இடை இருக்கோ இல்லையோ என ஐயுறும்படியான சிற்றிடை உடைய என் மனைவி உங்களின் உடற்பளுவை எப்படித் தாங்குவாள்? சிச்சீ! கொலைகாரப் பயல்களே, போங்கடா சீக்கிரம், என நைந்த உள்ளத்தோடு நலிவு கொண்ட காதலின் கதையைச் சொன்ன உங்களுக்கு 'பிரிவுநோய்' எத்தகைய தொல்லையைத் தரும் என்பது கூடவா புலனாகாது போய்விட்டது?

பிரிவு என்றால் அது சாதாரணப் பிரிவா? பொருள்தேடப் போனவர் திரும்பி வருவார் என எண்ணி அமைதி காணமுடியாதபடி அல்லவோ உங்கள் பிரிவு அமைந்துவிட்டது! 'வேசியர் உறவு' என்பதைக் கேட்டதும் கொலைத்தண்டனை தரப்பட்ட குற்றவாளியைப்போலக் கதிகலங்கிப் போனேன். உங்களின் செம்மையைத் திரும்பவும் காணும்போது நான் பெறலரும் மகிழ்ச்சி காணுகிறேன்.

> 'தாம்வீழ்வார் மென்றோள் துயிலி னினிதுகொல்
> தாமரைக் கண்ணா னுலகு'
>
> 'வேட்ட பொழுதி னவையவை போலுமே
> தோட்டார் கதுப்பினா டோள்'

என்னும் குறட் பாக்களைக் குறியாகக் கொண்டு மனைநலங் காண விரைவினில் வந்து சேருங்கள் என வேண்டுகிறேன். மயக்கந் தீர்க்க மாமணியே, மறுவுக விரைவில்.

உங்கள்
கமலா.

திரு. நாகமுத்தையா அவர்களின் 6-வது கடிதத்திற்குப் பதில் தருபவர்கள் பழம் பாடல் இலக்கியச் சான்றுகளுடன் 8-3-56க்குள் எழுதி அனுப்புக.

அவனும் அவளும்!

'தலைவியின் தளிர்மேனி தணலாகியிருக்குமே, என் வருகைக்காகக் காத்து நின்ற நால் அக்கட்டழகியின் கால்கள் வீங்கியிருக்குமே'-என்று தலைவியின் நினைவுகளை இதயத்திலே மோத விட்டுக்கொண்டு, அதிவேகமாக வருவான் தலைவன். நேரமோ நள்ளிரவு-நடக்கும் வழியோ களளிக்காடு-இடையிடையே எத்துணைத் துன்பங்கள் தன்னை வருத்தினும் தான் வருந்தாது தலைவியின் இல்லம் வந்து சேருவான், ஆனால் தலைவியோ தலைவனைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கண நேரமும் வெந்தணலில் வெந்து கொண்டிருப்பாள். தலைவன் வரும் வழியே நோக்கி நோக்கி ஏக்கத்தால் தலைவியின் விழிகள் புனல் சோரிய உடலெல்லாம் கனலாக, தோழியை நோக்கி 'ஏனடி அவர் இன்னும் வரவில்லை' என்று வினாடிக்கொரு வினாவை எழுப்பிக் கொண்டேயிருப்பாள்.

தலைவியின் இதயத் துடிப்பு, அவள் விடும் பெருமூச்சு, தோழியின் ஆறுதல் பேச்சுக்கு அடங்கிடாது குமுறிக்கொண்டேயிருக்கும், நள்ளிரவில் வரும் தன் காதலனுக்கு ஏதும் ஊறு நேருமோ என்று அந்தக் கார் குழற் கட்டழகி இதயத்தைக் குழப்பிக் கொண்டேயிருப்பாள். அவள் வாழ்வில் இது இன்று நேற்று நடப்பதல்ல! நீண்ட நாட்களாகவே நடந்துவரும் நிகழ்ச்சிதான். வேற்றூரிலிருந்து தலைவன் நள்ளிரவில் வருவதும், அவனை யுள்ளி யுள்ளித் தலைவி உள்ளம் உருகுவதும் நித்தமும் நடக்கும் நிகழ்ச்சிதான்! இருப்பினும் சித்தம் குலைந்த அந்த உத்தமத் தலைவி தன் வித்தகத் தலைவனின் நினைவிலே பொதிந்து 'கண்ணாளர் வருவார், கனி முத்தம் தருவார்' என்று ஆசை அலைகளுக்கும், 'ஆபத்தோ என்னவோ'-என்ற வேதனைப் புயலுக்கு மிடையில் சிக்கிய சிறு கலம் போல் தவிப்பாள்-காதல் நினைவுகளைக் குவிப்பாள்!

தலைவியின் இருதயத் துடிப்பு தெரிந்ததுதான் தலைவனுக்கு. என்ன செய்வான்? தலைவியின் நினைவுகள் நெஞ்சிலே அரும்பி நிற்க, குறிஞ்சி நிலத் தலைவன் காற்றெனக் கடுகிச் செல்வன்-காதல் நினைவுகள் அவனைக் கொன்று தின்றும். தலைவன் வருமளவு தலைவியினருகே இருந்து தோழி, 'வந்திடுவார் கண்ணாளர், தந்திடுவார்........!' எனத் தேறுதலுரைகளைக் கூறுவாள். வெந்தணலில் வெந்து கொண்டிருக்கும் வேல்விழியாளுக்குத் தோழியின் வார்த்தைகள் ஏறுமா என்ன? தலைவனல்லவா செவிக்குணவு, விழிக்குணவு, செவ்விதழுக் குணவு தர வேண்டும்!

தோழியின் ஆறுதலும் தேறுதலும் தலைவியின் இதயத் துடிப்பை அடக்க முடியவில்லை. மாருக வேதனை வெடித்துச் சிதறியது! சிந்தித்தாள்-தலைவியின் நிலை புணர்ந்து தலைவன் நள்ளிரவில் வருவதை விலக்க நினைத்தாள்-வழியொன்றும் அமைத்தாள்!

ஒரு நாள்-நள்ளிரவு-தலைவன் இல்லம் நுழைகிறான், சொல்லிலடங்காப் பெருமிதத்தோடு. குறுக்கிடுகிறாள் தோழி! ஆழியெனக் குமுறும் தலைவியின் காதல் நோய் - அதனாலுண்டான பிரிவாற்றாமை ஆகிய இவற்றைக் குறிப்பின் மூலம் தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

'தலைவ! உன் குறிஞ்சி நிலத்திலே வசிக்கும் குரங்கினத்தில், ஆண் குரங்கு இறந்து விட்டால் பெண் குரங்கு கைமைத் துன்பத்தாலும், பிரிவாற்றாமையாலும் பெரிதும் வருந்தித் தன் குட்டியைச் சுற்றத்துடன் சேர்த்துவிட்டு, உயர்ந்த கோடு முடியின் கண்ணிருந்து வீழ்ந்து இறந்துவிடும். ஆதலால் உனக்கு ஊறு நேரின் தலைவி உயிர் தரியாள்'-என்று தோழி, தலைவனை நோக்கிக் கூறுகிறாள்.

தலைவனது குறிஞ்சி நிலத்திலுள்ள குரங்கினத்தின் இயல்பைக் காட்டி, தன் பாங்கர்க்குத் தீங்கென்றால் தலைவி கணப்பொழுதும் வாழ மாட்டாள்-என்பதைக் குறிப்பின் மூலம் உள்ளுறை நயந் தோன்ற நவிலும் காவியக் காட்சி குறுந்தொகையில் பரக்கக் காணலாம். அவற்றிலொன்றுதான் இங்கு கண்டது. அது இது:—

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளை முதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே"

— மகிழேந்தி

★

ஈர உதடுகள்......

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

புரட்டிப்புரட்டி எடுத்தது. சூடு தாங்காச் சுந்தர ரூபம், சுருண்டு போனாள்! ஏன்? யாருக்குத் தெரியும்?

திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் தானிருக்கின்றன. சொக்கநாதர் அரணைவால் துடிப்புடன் ஆகவேண்டிய காரியங்களைப் பார்த்தார். மகனிடமிருந்த பாசத்தை அடிக்கடி புதுப்பித்துக்கொண்டார்.

அன்று இரவு சென்னையிலிருந்து தூத்துக்குடி எக்ஸ்பிரசில் மதுரைக்குப் புறப்பட இருக்கிறார்கள். வருவதற்கு சற்று முன்பு சொக்கநாதர் வாசுவை அழைத்தார்.

"வாசு, எனக்காக இன்று நீ சித்தியுடன் பேசு! பேசித்தான் தீரவேண்டும் வாசு. உன் வாயால் சித்தியைத் திருமணத்திற்கு அழைப்பதுதான் முறை, வாசு! அப்போதுதான் அவள் மனம் குளிரும். குழந்தை உள்ளமப்பா அவளுக்கு! 'சித்தி புறப்படலாமா' என்று கேட்டால் போதும்! அவள் வயிற்றிலே பால் வார்த்தது மாதிரியப்பா!" என்று இரக்கச் சித்தத்தோடு சொக்கநாதர் பேசினார்.

வாசுவின் முகத்திலே வழக்கம் போல் வியர்வை துளிர்த்தது. அந்த வியர்வைத் துளிகள் ஒன்றுக்குப் பத்தாக உருவெடுத்து சொக்கநாதரின் முகத்திலே கேள்விக்குறிகளை விதைத்தன. ஆனாலும் அவர் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக, வாசுவைக் கைபிடித்து அழைத்தார். வாசுவுக்கெனச் சற்றுமுன்பு அலமு மேஜையில் வைத்துவிட்டுப் போன பாலை எடுத்துக் குடித்து விட்டுச் தந்தை பின் சென்றான். இருவரும் அலமுவின் அறைக்குள் போனார்கள். அதுவரை அலமு மதுரைக்குக் கிளம்பும் பாவனையில் இல்லை.

"அலமு, வாசு வந்திருக்கிறான்" என்றார் சொக்கநாதர் மகிழ்வோடு, செயற்கரிய செயல் புரிந்துவிட்ட பூரிப்போடு.

அலமு நிமிர்ந்து பார்த்தாள். அவள் ஏற்கனவே அழுது கொண்டிருந்தாள் என்பதை அப்போதுதான் அவள் கண்கள் சொல்லின.

"சி...த்...தி!"-என்று இழுத்தான் வாசு, ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு முதல் முறையாக.

பொங்கி எழுந்த உணர்ச்சி வெள்ளத்தை அவளால் அடக்க முடியவில்லை. முகம் வெடிக்க, கண்கள் பிதுங்க 'அத்தான்!' என்று கதறிக்கொண்டு வாசுவின் பாதத்தில் சாய்ந்தாள் அலமேலு.

"அலமு!"-கத்தினார் சொக்கநாதர்.

அலமு வாசுவின் காலடியில் கிடந்தாள். சிலையாக நின்ற வாசு சொக்கநாதரின் மீதுசாய்ந்தான். "ஆ!" என்று கதறி, சொக்கநாதர் இடக்கரத்தால் தனது முதுகைத் தடவினார். அவரது முதுகில் உட்கார்ந்த ஒரு செந்தேள் ஆசைதீரக் கொட்டியிருப்பது அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது. வாசுவைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

★

கிழட்டு ராஜனுடைய மூத்த குமாரனை அவனுடைய சித்தி காதலிக்கிறாள். அந்த ராஜகுமாரன் மறுக்கிறான். ஆசை நிறைவேறவில்லை என்ற ஆத்திரத்தில் ராஜகுமாரனை இருட்டறையில் போட்டுக் கொன்று விடுகிறாள் ராணி. இப்படி ஒரு நாடகம் 'ஈரஉதடுகள்' என்ற தலைப்பில். இரண்டாண்டுகளுக்குமுன்பு வாசுவால் எழுதப்பட்டு இண்டர் மீடியட் வகுப்பில் படிக்கும்போது நடத்தப் பட்டது. அதில் ராஜகுமாரனாக வாசு நடித்தான். ராணியாக அலமு நடித்தாள். அதே அலமு இப்போது வாசுவுக்குச் சிற்றன்னையானாள். நாடகத்தில மட்டுமல்ல, நடைமுறையிலும் அலமு வாசுவை நேசித்தாள் அன்றொருநாள். வாசுவுக்கு அவள்மீது விருப்பமில்லை. ஆனாலும் 'சித்தி'யாக வந்த பிறகு அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்தான். சித்தியோடு பேச்சுத் தொடர்பு கொண்டால் சித்தியின் பழைய எண்ணம் புத்துயிர் பெற்றுவிடக்கூடும் என்றுதான் அவளோடு பேசுவதையே நிறுத்திவிட்டான். பாவம். சொக்கநாதருக்கு இவையெல்லாம் தெரிவதற்கு மார்க்கமேது?

★

வாசுவின் வாய் நுரை தள்ளியது. நாக்கு அவனுடைய உதடுகளை ஈரமாக்கி ஓடியது. சொக்கநாதருக்கு ஒன்றும் புரியவில்லை. உள்ளே ஓடினார். அங்கே அலமுவும் கக்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய உதடுகளும் ஈரமாயிருந்தன. இளைஞனின் முத்தத்திற்கு ஏங்கிக் கிடந்தஅவளுடைய உதடுகளும், உதட்டை அசைத்து உரையாடினால் பழைய காதல் உருப்பெற்றுவிடுமோ என்று அஞ்சி அடங்கிக்கிடந்த அவனுடைய உதடுகளும்இறுதியிலே ஈர உதடுகளாகவே துடிப்பிழந்தன.

மறுநாள் பத்திரிகையில், "மூத்த தாரத்தின் மகனுக்கு பாலில் விஷம் கலந்து கொன்று விட்டுத் தானும் தற்கொலை" என்ற சோகச் செய்தி பெரிய எழுத்துக்களில் பிரசுரமாயிருந்தது.

— தென்னரசு

S எஸ் மார்க் சீயக்காய்த்தூள்
REGD. TRADE MARK
விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை
உற்பத்தி நிலையம்: வீராக்கியம் P.O
திருச்சி

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. என். என். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.